# தத்துவபோதினி.

பு. உ.] சென்னைப்பட்டணம் கஅகூகூவரு மார்ச்சிமீ எஉ. [இல. கக.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸ்ரீமதத்வைதம், தமேதா
யஃ-ஸ்ராதாநம் தஃஸ்ரவநாயம், யவாதமிஃ-ஸ்ரீநதாஸ்யூவஞி, அமெ
தமெஃ-ஸ்வமெவாவியஞி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

---

## அட்டவணை.

விஷயங்கள்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| க. கடவுள்துதி | உஉரு | ரு. பகவத்கீதை | உநச |
| உ. விளம்பரங்கள் | உஉசு | சு. மநுநூல் | உநரு |
| ந. தத்துவபோதினி | உஉஎ | எ. நிருபங்கள் | உநசு |
| ச. ருக்குவேதசம்ஹிதை | உநந | அ. சேலம் வேதசமாஜ விண்ணப்பம் | உசக |


---

### சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

---

### கடவுள்துதி.

இராகம் - தந்நியாசி - தாளம் - திரிபுடை சாப்பு.

பல்லவி,

ஓஹோபரப்ரஹ்மனே - உன்பாதமலர்,
உவந்தளிப்பதுதர்ம்மமே.

அநுபல்லவி.

ஆஹாஈதென்னவாழ்க்கை யல்லலிலகப் பட்டேன்
மோகக்கொடுமையினை - யிறையுஞ்சகிக்கமாட்டேன்......(ஓஹோ.)

சரணங்கள்.

ஒன்றைநினைந்துபின் - ஒன்றைத்தேடுதேமனம்
ஒஹோஹோவுன்னைவிட - வுண்டோபெருந்தனம்,
கன்றுதாய்தனைப்பிரிந் - தாற்போலபிரதிதினம்
கலங்கிமுறையிட்டேற்கு - க்கடைக்கணிப்பாய்வந்தனம். (ஒஹோ.)

பொல்லாவஞ்ஞானத்தாலே - எல்லார்க்குந்தீயனாய்
பொய்கொலைகாமாதி - புகுந்துசெய்துவிட்டேன்,
கல்லாதவனானேன் - எல்லாம்வல்லோய்என்னைக்
கண்டித்துத்தண்டித்துக் - காத்தருள்வந்தித்தேன்.........(ஒஹோ.)

தன்னைமுன்னேயறியேன் - உன்னையென்னேயறியத்
தலைப்பட்டேன்மறையிற்கும் - தொலைப்பட்டோஎந்நாளும்,
முன்னும்பின்னுமற்ற - பேரின்பமாமுழு
முத்தியென்றபொருளை - நத்தினேன் எனையாளும்.........(ஒஹோ.)

படைக்கும்போதே - உன்னைப்பாராமற்போனேனே
பார்க்குள்வந்தபிறகும் - பாவியாய்ப்போனேனே,
கடைத்தேறுவதென்றோ - கதியெங்கோகாணேனே
கர்த்தனேஆநந்த - நர்த்தனேநித்தனே.............................(ஒஹோ.)


## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................ க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...... ...... .......... க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்

தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்க்காக, ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணா வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ௪ - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்றாய் பயிண்டுசெய்தது,........... 0 - ௮ - 0

ஷை மட்டபயிண்டுள்ளது..... 0 - ௭ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - ௧ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணாவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨௦௨ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

## தத்துவபோதினி.

சோதரர்களே! தத்துவகாமியென்பவர்கேட்ட கடைசிவினாவிற்கு இன்றுவிடைகூறுகிறோம். அந்தவினா யாதெனில், "ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும்வாழ்ந்ததும், சுவரூப ஆராதனம் செய்ததும், முக்திபெற்றதும் மெய்யாபொய்யா?" என்பதேயாம்.

அவர்கள் உயிர்வாழ்ந்தவிஷயத்தில்யாதொரு சங்கையும் ஜனிக்கத் தக்கதில்லை. அவர்கள் ஸ்வரூபாராதனம் செய்தார்களெ

ன்பதில் தினையளவும் சந்தேகமில்லையாகிலும், சுவரூபாராதனம் செய்தார்களென்ருவது இல்லையென்ருவது சொல்ல எங்களுக்குச் சக்தியில்லை. ஸரூபாராதனம் மாத்திரம் நிந்தியமாகுமேயன்றி, சுவரூபாராதனம் நிந்தியமாகமாட்டாது. உருவிலாக்கடவுளுக்கு உரிமையாயில்லாதரூபங்களை யாரோபித்து, விக்கிரகங்களாயும், ஸாளக்கிராமமாயும், லிங்கமாயும், இதரஹேயமார்க்கங்களாயும்அவரைத்தொழுவது ஸரூபாராதனமாகும். உருவமில்லாமையே அவருக்குசுவரூபமாகையால், அவரை யவ்விதமாய்க் கிரகித்துஆராதிப்பதே சர்வசிலாக்கியமான சுவரூபாராதனமாகும். 𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂, 𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌵𑌿𑌭𑍁𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂, 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂, 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌪𑌰𑌂𑌸𑍇𑌤𑍁𑌂 𑌦𑌗𑍍𑌧𑍇𑌨𑍍𑌧𑌨𑌮𑌿𑌵𑌾𑌨𑌲𑌂. "அது கண்ணிற்
"குவிளங்காதது, கிரகிக்கக்கூடாதது, அ
"டியுற்றது வர்ணமற்றது, கண்காதில்லா
"தது, கைகாலில்லாதது, நித்தியமான
"து விபுசுவரூபி, எங்கும் பரவியது, சூ
"க்ஷ்மமானது, அவயவமற்றது, தொழி
"லற்றது, சாந்தமானது, பழிப்பற்றது,
"மாசற்றது, பரமபதத்துக்குக்கேதுவா
"னது, ஜ்வலித்துக் கொண்டு மிருப்ப
"து"என்று யுக்திக்கிசைந்து வேதத்தால் சுவரூபலக்ஷணம் கூறப்பட்டிருக்கிற அந்த பரமாத்மாவுக்கு விக்கிரஹாதிகள் சுவரூபமாகுமோ வென்பதைச் சற்றுகவனிக்கவேண்டும். ஸ்வரூபாராதனம் செய்தவர்களுக்கு மோக்ஷமுண்டென்றும், இதரவித உபாஸனை யுடையவர்களுக்குக்கிடையாதென்றும் வேதம் பலவாறுமுறையிட்டபோதிலும், ஒரு வாக்கியத்தை யுதகரிப்பதே போதுமென்று நினைக்கிறேம். 𑌤𑌤𑍋 𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂 𑌤𑌦𑌰𑍂𑌪𑌮𑌨𑌾𑌮𑌯𑌂 𑌯 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌅𑌥𑍇𑌤𑌰𑍇 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿.

"சிறந்ததிலெல்லாம் சிறந்ததானது, ரூ
"பமும் துன்பமுமற்றது. இவ்வாறறிந்
"தவர் அமிருதராகிறார். இதரரோ து
"ன்பமே யடைகிறார்."என்று வேதம்முறையிடுகின்றது. பாகவதம் மூன்றும்ஸ்கந்தத்தில், "சகலபூதங்களிலும் ஆத்மஸ்வ
"ரூபமாயுள்ள ஈசுவரனை என்னைவிட்
"டுஎவன் முட்டாள்தனத்தினல் அர்ச்
"சையைத்தொழுகிருனே அவன் செய்
"யும்பூஜை சாம்பலிற் கொட்டிய நெய்
"யாகும்"என்று சொல்லி யிருக்கிறது. இவ்வாறு நிஷ்பலமானதென்று ஒரு பிரமாணத்தாலும், பாபக்கிரஸ்தமானதென்று சர்வசிரேஷ்டமான சப்தப்பிரமாணத்தாலும் ஒதுக்கப்பட்டிருக்கிற மார்க்கத்தையவலம்பித்த சிலர் மோக்ஷமடைந்தார்களா, இல்லையா வென்றெங்களைக் கேட்பானேன். மோக்ஷத்திற்குச் சென்று மீண்டவருண்டெனில், ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும், அவ்விடத்தி லிருப்பதற்கும் இல்லாமைக்கும் ஸாக்ஷியம்கிடைக்கும். அப்பிரத்தியக்ஷ விஷயங்களில் யுக்தியும், சுருதியும்தவிர நமக்குவேருரு ஆதாரமு மில்லை. அர்ச்சை முக்திக்குவழியென்பதற்கு யாதொரு யுக்தியும் காணேம். சுருதியாலோ அர்ச்சை முக்திக்கு ஹேதுவாகாவிடினும், நரகத்திற்கு ஹேதுவாகுமென்றுமாத்திரம் ஸ்பஷ்டமா யேற்படுகிறது. வேதத்தை ஒழித்துவிட்டால் எவ்விதசித்தாந்தங்கள் செய்யலாமாகிலும், வேதமுள்ளவரையில் மேற்குறித்த பெரியோர் அர்ச்சையால் முக்தியடையவில்லையென்றே கூறவேண்டியிருக்கும். ஆகிலும் அவர்கள் முக்தியடையவில்லையென்று கூறுவதுஎங்களுத்தேசியமல்ல. அவர்கள் கதிபெற்றே யிருக்கலாம். அப்படி பெற்றிருக்கில் அதற்கு வேறு ஹேதுவிருந்திருக்குமேயன்றி, அர்ச்சை யீஷத்தேனும் காரணமா யிருக்கக்கூடாதென்று மாத்திரம் உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

———

"மெய்ம்மை கூறுவோனெ"ன்று கையொப்பமிட்டுக் கடந்தபத்திரிகையில் பிரசுரமாகிய ஒருநிருபத்தைக்குறித்தின்று சிலமொழிகளைச் செலவழிப்போம்.

“ஆதியில் பிரர்மனம் நொகும்படியான காரியங்களில் பிரவேசிக்கிறதில்லையென்று நாங்கள் செய்துகொண்ட பிரதிக்கினையையுங் கடந்துவாசிப்போர் வாய்கசக்கும்படியாகவும் இவ்விருதிறத்தாருக்கும் மனம் வருந்தும்படியாகவும், சாஸ்திர விருத்தமாயும், சிஷ்டர்கர்ஹிதமாயும், அபகீர்த்திகரமாயும், இகபரநன்மைகளுக்குக் கேடாயும், உங்களுடைய பொதுவான கொள்கைக்கே முற்றும் பழுதாயும், பற்பல நூல்களையுங்கற்று உண்மைப்பொருளை யுணர்ந்துகொள்ளாமற்றானே இயற்கையினாலோ அல்லது கூட்டுறவாலுண்டாகிய செயற்கையினாலோ கௌரவிக்கத்தகாதவைகளைக் கௌரவித்தும், நிந்திக்கத்தகாதவைகளை நாவெழுந்து நிந்தித்தும்வாத் தொடங்கியது சரியல்லவேயென்று புத்திமான்கள்பலர்சொல்வதையும்கேட்டுயான் சகியாதவனாய் எழுதத்துணிவுற்றனன்,” என்று நிருபக்காரர் கூறுகிறார். பிறர்மனம் நோகும்படியான காரியத்தில் நாங்கள் வலியப்பிரவேசிக்கிறதில்லை யென்பது எங்கள்பிரதிக்கினையேயன்றி எங்களை வாதுக்கிழுத்தாலும் ஊமையாயிருப்போமென்பதல்ல. எங்கள் சமாஜமேற்பட்டபதிமூன்று மாதவரையில் நாங்கள் எங்கள்வரையில் வேதோக்த பகவதாராதன மார்க்கத்தை யவலம்பித்தபோதிலும் நம்மவரில் இதரருடைய உபாசமார்க்கங்களையிகழ்ந்து பேசாமலிருந்தோம். பிறகு கும்பகோணத்தையர் வெளிப்பட்டு வெள்ளைநாயை கறுப்புநாயாக்கத்தலைப்பட்டவுடனே ஆத்மசம்ரக்ஷணார்த்தம் விடையுரைக்கும்படி நேரிட்டது. அப்படியெழுதினவிடையும் நம்மவிவேகிகளில் பலருக்கு இனித்தேயிருக்கிறதென்பதற்கு நிதர்சனமாக ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரமாகிவரும் நிருபங்களையும் முக்கியமாய் இன்றிய பத்திரிகையில் வெளிப்படும் பலநிருபங்களையும் கொள்ளலாம். அப்படியிருக்க இந்தநிருபக்காரருக்கு வாய்கசப்பது அவருடைய பாபவசமோ எங்கள்சொல்லின்குற்றமோவென்பதை புத்திமான்களே தேறித்தெளியவேண்டியது. சாஸ்திர விருத்தமென்றும் சிஷ்டர்கர்ஹிதமென்றும் இன்னும்பற்பல பொதுஉரைகளுக்கு விடையாக அவர்கூறும் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறையாகவும் எதிர்மறைவாக்கியங்களை உடன்பாடாகவும் கொள்வதே தத்துவமாகுமென்று பொதுப்பட விடையுரைப்பதே போதுமாகவிருக்கின்றது. பழயவாசனையால் பரதவித்தபோதிலும் உண்மையில் தங்களுக்காதாரமில்லையென்று அறிந்துகொண்டு மவுனமாயிருந்தவர் உண்மையில் புத்திமான்களே யாகிலும், அவர்களைக்கண்டாவது கற்றுக்கொள்ளாமல்ஆதுரத்தால் வெளிப்பட்ட இந்த நிருபக்காரரை பரிபாவப்படுத்துவது எங்களுத்தேசியமல்ல. “இவ்வாறிருந்தது யான்மாத்திரமோ மற்றுஞ்சில புத்திமான்களுந்தான்” என்று நம்மன்பர் தாமேபுத்திமானென்று உரைத்தசொல்லையும் அதற்கு நிதர்சனமாக்கிக்கொள்ளவேண்டாம்.

இராமானுஜாசாரியர் த்வயத்தை வெளியிட்டதாயுள்ள உபாக்கியானத்தை நாங்கள் முறைதப்பி கூறியதாய் நம்மன்பர் எங்கள்மீது தோஷாரோபணம் செய்கிறார். ௧௮௫௭ - ௵த்தில் ஒருகும்பகோணத்தாசாரியரால் குருபரம்பரையென்னும் ஒரு சுவடி யச்சிடப்பட்டதற்கு முன் இந்தக்கதைகளெல்லாம் கேவலம் வாய்மொழியாய் சென்று வந்தனவேயன்றி கிரந்த ஸதமானவையல்ல. நாங்கள்சொல்லியவாறே அனேகபாட்டுகளிருப்பதையும் எடுத்துரைக்கக்கூடும். நாங்களந்த உபாக்கியானத்தைக் கூறியதில் எங்கள் கருத்தென்னவென்று சற்று யோசித்தால் ஆவசியகத்தைப்பற்றி பிரதிக்கியாபங்கமும் சாதுவென்று அவர்கொண்டு அனுஷ்டித்தாரென்பதை நிரூபிப்பதே யெங்கள் உத்தேசியமென்று வெளியாகும். இதற்கு நிதர்சனமாக நம்மன்பர்கோறும் குருபரம்பரை ௫௭-வது பக்கத்தில் சொல்லியிருப்பது வருமாறு. “நம்பியும் இவ்வர்த்தத்தை யொருவருக்குஞ்சொல்லவேண்டாமென்று நியமித்தருளி திருமந்திரார்த்தத்தையும் சர்மசுலோகார்த்தத்தையும் பரக்கப்பிரசாதித் தருளினர். உடையவர் கிருதார்த்தராயமற்றைநாள் தெற்காழ்வான் திருவோலக்கத்தில்அந்தரகசியார்த்தத்

ணைத எல்லாருக்கும் பிரசாதித்தருளினார். இச்செய்தியை நம்பிசேட்டுவேண்டாமென்றதைச் செய்த உமக்குள்ள பலன்என்னென்று உடையவரைக்கேட்க உடையவர் ஆசாரியநியமனத்தை மறுத்தவடியேனுக்கு நரகமேபலனென்று விண்ணப்பம் செய்ய நம்பி இப்படியறிந்து செய்பவருக்குமோவென்றுகேட்டருள, அடியேனொருவன் நரகத்துக்குப்போவேன், ஆகிலும் இவ்வர்த்தத்தைக்கேட்ட ஆத்மகோடிகளெல்லாம் பரமபத மடைவார்களென்று விண்ணப்பம்செய்தார்'' என்று சொல்லியிருக்கிறது. அன்றியும் துவயத்தைவெளியிட்டாரென்று நாங்களுரைத்தது பழுதென நிருபக்காரர் பிரஸ்தாபித்திருக்கிறார். மேலேவரைந்த அனுவாதத்தில்திருமந்திரார்த்தத்தை வெளியிட்டதாக சொல்லியிருக்கிறதல்லவா? அஷ்டாக்ஷரம் துவயம் இவ்விரண்டிற்குமே திருமந்திரமென்கிற வியவஹாரம் உண்டாயிருக்கிறது. ஆகையால் அஷ்டாக்ஷரத்தையும் வெளியாக்கினாரென்று சொல்லாமற்போனது ஒருவேளை யெங்கள்மீது தோஷமாய்ச்சுமந்தபோதிலும் துவயத்தை வெளியிட்டாரென்பது பொய்யல்லவே. இதுவரை முகவுரையைக்குறித்து யோசித்தோம். இனி அவரெடுத்தவிஷயத்தைக்குறித்துச் சிலமொழிகளைச் சொல்வோம்.

## விக்கிரஹாராதனம்.

வரதவேங்கிட சம்வாதமென்று ஒரு நிருபம் எங்கள்பத்திரிகையில் பிரசுரமானதாகவும் அதற்கு நாங்கள் பாத்தியப்படவேண்டுமென்றும், அது ஒருகிரந்தத்துக்கும் ஒவ்வாததென்றும் நமதன்பர் கூறியிருக்கிறார். பலர் பலவிஷயமாய் எழுதும் நிருபங்களை எங்கள்பத்திரிகையில் பிரசுரப்படுத்துகிறோமென்பது எல்லோர்க்குந் தெரிந்தவிஷயம். நம்மன்பருடையஇந்த நிருபத்தையே பிரசுரப்படுத்திய நாங்கள் அந்த சம்வாதத்தை பிரசுரப்படுத்தினது பழுதாகுமோ? கடைசியாக "உண்மைகூறுவோர்" ராகிலும், உண்மையைக் கேழ்க மனமிராத நம்மன்பர்க்கு அதினால் மனவருத்த முண்டாயிருந்தபோதிலும் நாங்களறிந்தவரை அந்தசம்வாதத்தில் ஒரு எழுத்தளவும் பெசகிருப்பதாய்தோன்றவில்லை. நம்மவர் தெய்வபக்திவிசேஷத்தால் குடுமியுந் தாடியும் பத்திக்கொண்டு கோர்ட்டுகளில்போய் நிற்பதைச் சரியாய்வர்ணிக்காமல் போனது அவரிடத்தில் குற்றமென்றால் அதையொப்புக்கொள்வோம். அக்டோபர்மாதத்திய பத்திரிகையில் இவ்விஷயமாய் நாங்கள்செய்தபிரஸ்தாபத்துக்கு அதிலேயே சமாதானம் விளங்கு மாகையால் அதைமறுபடியுரைக்கவேண்டியதில்லை. பொய்யைச்சொல்லத்துணிந்தபடியால் அதைக்குறித்துமாத்திரம் சற்றுயோசிப்போம். பிராம்மணவர்ணத்துக்குள் ஏற்பட்டிருக்கும் அவாந்தரபேதங்களாகிய சைவ வைஷ்ணவ மதஸ்தர்கள் ஒருவரோடொருவர் போஜனப்பிரதிபோஜனமும் கொள்வினைகொடுப்பனையும் செய்யக்கூடாதென்று ஸ்மிருத்தியாதிகளில் பிரசித்தமாம் விதியேற்பட்டிருப்பதாக நம்மன்பர் உறுதியாயுரைக்கின்றனர். நம்மன்பர் ஜனங்களைப்பிரமிக்கச்செய்யவேண்டுமென்கிற சிந்தையின்றி நிஸ்பிரஹராய் தத்துவம் விசாரிக்கும் பக்ஷத்தில் அவருடன் நாங்களிப்பொழுது ஒரு பிரதிக்கியை செய்துகொள்ளுகிறோம். சுருதி, ஸ்மிருதிமுதலிய திருமதஸ்தருக்கும் பொதுப்பட்டபிரமாணமாயுள்ள எந்தக்கிரந்தத்தைக் கொண்டாவது இவ்விஷயத்தில், எங்கள்கொள்கைப் பழுதென்று ஸ்தாபிப்பாராகில் தக்ஷணமே நாங்கள் பாயைச் சுருட்டிக்கொண்டு பலாயனமாகிவிடுகிறோம். அப்படிசாதிக்க அவரால் முடியாதபக்ஷத்தில் இவ்வித மெய்கூறுவோர் சம்மதத்தால் எங்கள் சமாஜத்துக்கு மஹிமை வேண்டாவிடினும் பிறகு இவரை யென்னபெயரிட்டழைக்கிறதென்று மாத்திரம் வினயமாய்கேட்கிறோம். இந்தப்பிரதிக்கியைக்கு இவர் உட்படாதவரையில் இதரவிஷயங்களில் இவர்சொல்லும் பேச்சை ம்திக்கவேண்டியவழி இன்னதென்று நாங்கள் எச்சரிக்கவேண்டியதில்லையே. இதினாலெங்களிருவருடைய கர்மபரிபாக தாரதம்மியம் விளங்குமென்று நம்புகிறோம்.

## கர்மவிஷயம்.

இவ்விடத்தில்தலைப்புக்கும்விஷயத்துக்கும் இதற்காதாரமாகப் பிரமாணந்தேடத்தலைப்பட்டநம்மன்பர்பிரசித்தப்பட்டியமான வேதங்களிலாவது உபநிஷத்துக்களிலாவது யாதொருபிரமாணமும் கிடையாமல் கொஞ்சம்நாளாய் பயிராய்க்கொண்டிருக்கும் உபநிஷத்துகளிலொன்றாகிய ராமதாபினி யென்பதினின்றும் ஒரு வாக்கியத்தை யுதகரித்திருக்கிறார். இத்தன்மையான உபநிஷத்துக்களைக் குறித்துமுதல் விண்ணப்பத்தில் கூடியவரை விசாரித் திருக்கின்றமையால் புனருப்தி அனாவசியகம். நம்மவரில் ஒருகிரந்தத்துக்கு மஹிமையைக்கல்பிக்கும் பொருட்டு அதற்கு வேதமென்றும் உபநிஷத்தென்றும் பெயரிடுவது வெகுநாளைப்பழக்கமாயிருக்கின்றது. பாரதத்தை வேதமென்றும், கீதையை உபநிஷத்தென்றும் வியவஹரிப்பதே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமென்று நம்புகிறோம். பாரதத்துக்குப் பின்னிட்டும் நம்மவர் பிறப்பித்த இத்தன்மையான வேதங்கள் அனேகமிருக்கினும் இவற்றையெல்லாம் உண்மையானவேதமென்றே கொள்ளக்கூடுமோ ? அனந்தா வைவேதா: என்கிறபிரமாணத்தாலும் ஆசாரபலத்தாலும் பாஞ்சராத்திரநியமத்தாலும் இதுவே தோக்தமானதென்று அனுமானிக்கவேண்டியதாய் நம்மன்பர் உரைக்கிறார். இந்தவாதங்களின் சுவரூபத்தையும் இன்னுமிவ்விஷயத்தில்இவரெடுக்கும் ஆக்ஷேபங்களையும் குறித்து எங்கள் முதல்விண்ணப்பத்தில் பூர்ணமாய் விசாரித்திருக்கிறோம்.

## வருணங்களின்அவாந்தரபேதம்.

இவ்விஷயமாய் நம்மன்பர் யாதொரு சரியான ஆக்ஷேபமும் செய்யாவிடினும் ஒரு பிரசித்தமான சம்மந்தமின்றி சங்கரராமானுஜசாரியர்களுக்குள் கவுரவதாரதம்மியத்துக்காக நம்மன்பர்மல்லாடுகிறார். சிலநாளைக்குமுன் விசாகபட்டண மகாராஜாவுக்கும், பப்பிலி ஜமீன்தாரருக்கும் பிரிதுப்பெயர் நிமித்தமாக ஐகோர்ட்டிலொரு வியாச்சியம் வந்திருந்ததுஅ்துமறந்துபோகாமலிருக்க நமதன்பர் சங்கரராமானுஜசம்வாதத்தை கர்மவிஷயத்துக்கு லக்ஷியமாகவெழுதினார். இதையும்நாங்கள் பயனற்றதாய் கிரகிக்கவில்லை. இவர்துவக்கத்தில் ஆக்ஷேபித்த வரதவேங்கிடசம்வாதத்தி னுண்மையை ஸ்தாபிக்கவேஇவர் இந்த சங்கரராமானுஜ சம்வாதத்தையெழுதினார்போலும், இவருடைய அபிப்பிராயத்தின்சுவரூபத்தை நிரூபிக்கவேண்டியவர்களும்தக்கவர்களுமாகஅனந்தகோடிசங்கரமதத்தாரிருக்கின்றமையால் நாங்கள் பிரையாசப்படவேண்டிய ஆவசியகமில்லையென்றுநம்புகிறோம்.

---

## வேதசமாஜம்.

வேதாந்தப் பிரசங்கத்தின் பொருட்டோர் சமாஜம் ஏற்படுவதாக கோயம்புதூர்ஜில்லா உடமலைப் பேட்டையிலிருந்தொரு கனவான் எழுதியகடிதத்தை வாசிக்க நமதன்பர் யாவரும் மிகக்களிப்புறுவார்களென நம்புகிறோம். இவ்வளவு சீக்கிரத்தில் நம்மவர்உண்மையானவும்அறுதியானவும் நமது வேதார்த்தங்களை விரும்பியுணர்ந்து அவைகளால் விதிக்கப்படும் வேதாந்தமார்க்கத்தை பயரங்கமாயனுஷ்டிக்கத் தலைப்பட்டதுகடவுளுடைய அருளென்றே கொள்ளவேண்டும். இதனால் நமதுமுன்னோர்கள் வேதாந்தத்தை அறியவில்லையென்றாவது இவர்கள் நூதனமாக வறிய முயலுகிறார்களென்றாவது யாங்கள் சொல்வதில்லை. ஆனால் நமது முன்னோர் பனிரெண்டுவருஷகாலம்குருகுலவாசம்செய்தும், சம்சாரத்தைத்துறந்து அந்ந ஆகாரமின்றி காடு வனாந்திரங்களில் சஞ்சாரஞ் செய்தும் பெறுவதற்கருமையாயிருந்த பிரம்ம வித்தையானதுஇக்காலத்தோருக்கு அதிசுலபமாக லப்பியமாய் இஹபர சுகங்களை ஒருங்கேயளிக்க வகையுண்டானதைப் பற்றி சிந்திக்குந்தோறும் எமதுள்ளம்உவகையோடுபொங்குகின்றது. ஸர்வ தயாபரனாகிய எமதப்பன் சகலசிவகோடிகளின் இருதயத்திலும் குடிகொண்டு எவர்க்கு

ம் பேரானந்தமிய்ய சங்கல்பித்திருக்க, இப்பெருநன்மை சம்ஸாரத்தில் மூழ்கிய நமக்குக்கிட்டாதெனல் தகுமோ. மேலுஞ்சற்று யோசிப்போமானால்இவர்களும் பொய்யான சம்சாரத்தை மெய்பாகவே துறந்தவர்களென்பது விசிதப்படும். இவர்கள்துறந்தசம்சாரம் யாதென்றாலோ சற்று விவரிப்போம். பொய்யானநிலையுமறிவும்யற்ற பூதங்களை மெய்யானஉயிர்களாய் பாவித்து, அவைகளுக்கு ஜீவஸ்வரூபங்கல்பித்து, ஸ்தானபானாதிகள் செய்வித்து, ஆடையாபரணங்களைத் தரித்து, கலவசாந்துபூசி, சுகந்த புஷ்பாதிகளை யீந்து, அருசுவையுணவையுண்மையோடும் அன்போடுமூதவுவது போல்நடித்துசதிர் பாணவேடிக்கை, சவாரி, முதலியவற்றைச்செய்விப்பதுமன்றி, கல்லியாணம்நிஷேகம், முதலிய பொச்சடங்குகள்பலநடத்தி, இவைகளுக்கொருநாள்பூசைநடவாவிடில்வாடிவதங்கிகோபமுண்டாகுமெனசதாகாலமுயற்சிசெய்யும்மாமோகசம்ஸாரத்தைஇவர்கள்துறக்கத்துணிந்தவர்களாம். யாவருக்கும்படியளக்கும்கடவுளுக்கே படியளக்கத்துணிந்தவராகி, ஆயிரம்பொன்செலவுசெய்து நம்மில்பலர் அழகான கோயில்கள் கட்டிவைத்தபோதிலும், இவைகளால் கிஞ்சித்தாவது ஆத்மலாபம் ஜனிக்கிறதாக தோன்றவில்லையே. சம்ஸாரதுக்கத்தால் வருந்திகோயிலுக்குப்போயாவதுசற்றிளைப்பாரலாமென்றாலோ, இங்கு அதைப்பார்க்கிலும்ஆயிரம்மடங்கதிகமான பொய்மையும் மோஹமும்எமையாட்கொள்ள வருகின்றன. ஆகச்சே, தத்துவவிசாரஞ்செய்யும் நமதன்பர்கள்ஆயிரம் திவ்வியஸ்தளவிபவங்களைச் சேவிப்பதைப்பார்க்கிலும், ஒருவருமறியாசிற்றில்லிலாயினும்சாதுக்களைச் சேர்ந்தோர்த்ததுவப்பிரசங்கத்தைச்சேவிபுறுவதுசிதமென்றுநம்பி சாதுசங்கங்களைச் சேர்பிக்க முயலுகின்றனர். ஆனால் இவர்கள் முன்னோர்துறந்த பெண்பிள்ளைகளாகிய சம்சாரத்தைத் துறக்கவில்லை யென்றாலோ, இதனால் பாதகமில்லை. நமது முன்னோர்களில் சிலர் பரப்பிரம்ம வாதிகளா யிருந்தமையாலும், தம்மைச்சூழ்ந்தவர்கள் அஞ்ஞானிகளாகவும் விக்கிரகாராதிகளுமா யிருந்தமையாலும், இவர்களோடு சஞ்சாரஞ்செய்வதால் தமது ஆத்மலாபத்துக்கு சங்கடம் நேரிடலாமென்றஞ்சி சம்ஸாரந்துறக்கவேண்டியதாய் நேரிட்டது. ஆயினும் இக்காலத்தோர் தாங்கள் பெற்றஞானத்தைத் தமது பந்துமித்திராதிகளனைவருக்கும் கற்பித்து எல்லாருக்கும் பரமசுகமுண்டாக்க முயலுகின்றமையால், இவர்களுக்குச் சம்சாரத்தால்இடையூறுநேரிடுவதில்லை. கடைசியாகஉடுமலைகோட்டையிலுள்ள நமது சோதரர்களுடைய முயற்சி சீக்கிறத்தில் சித்திபெறவேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கிறதுமன்றி அவர்களுடையசதானுஷ்டாதனத்தை எனையொரும் பற்றுவார்களெனகோருகின்றனம்.

தஞ்சையில்பட்டுக்கோட்டையென்னுமிடத்திலுமோர் சமாஜம் ஏற்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். இதைப்பற்றிதஞ்சையிலுள்ள நமதன்பர்கள் நடாத்துங்காரியங்களை யாங்களும் எனையோரும் கேட்டுமகிழும்படி கூடி யசிக்கிறதில் எழுதி அனுப்புவார்களென நம்புகிறோம்.

கடைசியாக, சேலம்சமாஜத்தார் அனுப்பிய விளம்பரத்தைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்வோம். இச்சமாஜம் ஏற்பட்டு சுமார் ஒருவருஷமாகிறது இவ்வொருவருஷகாலமும் இவர்கள்தவிராமல்பிரார்த்திதனாகைங்கரியங்களைச்சீராகநடத்தி, வேதார்த்தப் பிரசங்கங்களையுஞ்செய்துவந்தனர். அவர்கள்கருதியதெய்வகைங்கரியத்துக்குத் தக்கவிடமில்லாமல் வருந்துகின்றமையால், ஒருதிருமாளிகை சமைக்க எத்தினப்பட்டிருக்கின்றனர். இக்காரியத்தின் உசிதத்தையறிந்து நம்மவரனைவரும் அவர்களுக்கு தங்களால் கூடிய திருவியசகாயம் செய்வார்களென நம்புகிறோம்.

---

இன்றிய பத்திரிகையில் பிரசுரமாகும் நிருபங்களில் விடைவிரும்புமவற்றிற்கு வருகிறபத்திரிகையில் பதிலுரைப்போம்.

## ருக்குவேதசம்ஹிதை.

(தொடர்ச்சி.)

### சூக்தம், ரு. (௰௬)

[ருஷியும்பாவும் முன்போல தேவதை இந்திரன்.]

### வர்க்கம், ௯௦.

க. ஆத்வாவஹந்து ஹரயோவ்ருஷ. ணம்ஸோமபீதயே, இந்த்ரத்வா ஸூர சக்ஷஸ:.

வர்ஷிக்கிறவராகிய* உம்மை ஹரி (பொன்னுமும்முடைய இரண்டுகுதிரை)கள் ஸோமபானத்தின்பொருட்டுக் கொண்டு வருக. இந்திரனே, உம்மைச் சூரியனைப் போல் பிரகாசமுள்ளவர்கள் (ஆகிய ருத்துவிக்குகள் மந்திரங்களால் பிரகாசிப்பிப்பார்களாக.)

உ. இமாதாநா க்ருதஸ்நுவோ ஹரீஇஹோபவக்ஷத:, இந்த்ரம் ஸுகதமே ரதே.

இவைகள்நெய்யிலூறினயவங்கள்† (இவைகளின்பொருட்டு) ஹரிக்குதிரைகள் இந்திரனை மிகவும் சுகமானதேரில் கொண்டுவரக்கடவது.

௩. இந்த்ரம்ப்ராதர்ஹவாமஹ இந்த்ரம்ப்ரயத்யத்வரே, இந்த்ரம்ஸோமஸ்ய பீதயே.

இந்திரனைக் காலமே (பிராதஸ்ஸவனத்தில்) அழைக்கிறேன் ; யக்கியம்நடக்கையில் (மாத்தியநதின்ஸவனத்தில்) இந்திரனை (அழைக்கிறேன்); (அப்படியே யக்கியத்தின்முடிவில், மூன்றும்ஸவனத்தில்) இந்திரனை ஸோமபானத்தின் பொருட்டு (அழைக்கிறேன்.)

ச. உபநஸ்ஸுதமாகஹி ஹரிபிரிந்த்ர கேஸிபி:, ஸுதே ஹி த்வா ஹவாமஹே.

இந்திரனே, மயிருடையவைகளாகிய ஹரிகளோடு எங்களுடைய அபிஷுதஸோமத்தினிடத்துவரும்: அபிஷுதமாயிருக்குமிடத்து உம்மை அழைக்கிறேன்.

ரு. ஸேமம்நஸ்ஸ்தோமமாகஹ்யுபேதம்ஸவநம்ஸுதம், கௌரோநத்ருஷித: பிப.

அந்தநீர் நம்முடைய இந்தஸ்தோத்திரங்களின் அருகேவாரும்: இந்த அபிஷுத ஸோமம்பொருந்திய ஸவனம் (நடக்கிறது): தாகமுள்ள கௌர*மிருகத்தைப் போல் குடியும்.

௬. இமேஸோமாஸஇந்தவ: ஸுதாஸோ அதிபர்ஹிஷி, தாம்இந்த்ர ஸஹஸேபிப.

நீர்கலந்து பிழியப்பட்ட இந்த ஸோமங்கள் தர்ப்பையினிடத்தில் மிகுதியாக அபிஷுதங்களா யிருக்கின்றன இந்திரனே, அவைகளை வலிமையின் பொருட்டுக்குடியும்.

எ. அயம்தேஸ்தோமோ அக்ரியோ ஹ்ருதிஸ்ப்ருகஸ்து ஸம்தம:, அதாஸோமம் ஸுதம்பிப.

இந்த உம்முடைய ஸ்தோத்திரங்கள் சிரேஷ்டங்கள் : (அவை உம்முடைய)மனதில்பட்டு மிகவு மினியவைகளா யிருக்க. இப்போது அபிஷுதமான ஸோமத்தைக்குடியும்.

அ. விஸ்வமித்ஸவநம்ஸுதமிந்த்ரோ மதாய கச்சதி, வ்ருத்ரஹா ஸோமபீதயே.

* "விரும்பியவற்றை வர்ஷிக்கிறவர்" எனவுரை.

† வேதியனிடத்துக்கிடக்கிற, யாகத்தில் உபயோகிக்கப்பட்ட வாற்கோதுமை மணிகள்.

* ஓர்விதமான்.

பகைவர்களைக் கொல்லுகிறவராகிய இந்திரனானவர் முழுமையும் அபிஷுதஸோம யுக்தமாயிருக்கிற ஸவனத்தினிடத்து களிப்புக்காக ஸோமபானத்தின் பொருட்டுப் போகிறார்.

௯. ஸெஉம் நஃகோஉஉாவ்ருஷாஸெராஹீ ரஸெவ்வூஃஸதக்ருதே, த்வாஉக்ஷா ஹவாஸ்ருஃ.

ஓ சதக்கிரதுவே! அப்பேர்பட்ட நீர் எங்களுடைய இந்தவிருபத்தை, மாடுகளாலும் குதிரைகளாலும் நிறைவேற்றும்: (நாங்களும்) உம்மை எங்கும் குமிந்த தியானமுடையராய்ப் புகழ்வோமாக.

## பகவத்கீதை.

### ௧௬-வது-அத்தியாயம்.

௧. அபயம், ஸ்வபாவசுத்தி, ஞானயோகத்தில் ஸ்திரப்பட்டிருக்கை, தானம், தமம் (பாஹியேந்திரிய நிக்கிரகம்) சமம் (அந்திரிந்திரியநிக்கிரகம்) கல்வி, தபசு, ருஜுத்துவம் (என்றால் நேர்மை, கோடாமை.)

௨. ஹிம்சா ரஹிதம், சத்தியம், அக்கிரோதம் (கோபமின்மை,) தியாகம், (என்றால் உலகத்தினிடத்து பற்றில்லாமலிருத்தல்) சாந்தம், ஆபைசுனம் (என்றால் கபடமும் வஞ்சகமுமற்றதன்மை, அல்லது அருளுடைமை என்றும் சொல்லலாகும்,) பூததயை, அலோலத்துவம் (என்றால் விஷயங்களில் அச்சம் வரையின்றி உளல்வத்தைவிட்டு, நாணத்தோடு மிதத்திலடங்கி யிருக்குந்தன்மை,) மிருதுத்துவம் (அல்லதுமெல்லியதன்மை) வெட்கம், சபலமின்மை.

௩. ஶ்ரத்தை, பொறுமை, தைரியம், சுத்தி, திரோஹமின்மை, கர்வமின்மை, இக்குணங்கள்யாவும், ஒய் அர்ஜுனா! தெய்வசம்பந்தமான ஸ்வபாவத்தோடும் ஜனிக்கப்பட்டவனுக்கு உண்டாகின்றன. (என்றால் மேற்குறித்த மூன்றுசுலோகங்களினால் தெய்வீகத்தன்மையுள்ள மனிதனுக்குஇன்னின்னகுணங்களிருக்குமென்பது விளக்கப்பட்டது.)

௪. ஒய் அர்ஜுனா! அசுர சம்பந்தமான ஸ்வபாவத்தோடு ஜனிப்பவனுக்கு வஞ்சம், கர்வம், ஸ்வயாபிமானத்துவம், கோபம், பௌரஷம். அஞ்ஞானம், இவைகள் குணங்களாகின்றன.

௫. தெய்வசம்பந்தமானஸ்வபாவம்மோக்ஷத்துக்குச் சம்மதமானது. ஓ பாண்டவனே! நீதெய்வசம்பந்தமானஸ்வபாவத்தோடு பிறந்தவனாகின்றனை, துக்கப் படவேண்டாம்.

௬. ஓய் பார்த்தனே! இந்த லோகத்தில் பிராணிவர்க்கம்தெய்வசம்பந்தமென்றும் அசுரசம்பந்தமென்றும் இரண்டுவகைப்படும். தெய்வ சம்பந்தமானவை விஸ்தார மாகச் சொல்லப்பட்டன. அசுரசம்பந்தமானவற்றை என்னால் கேளும்.

௭. அசுரஸ்வபாவமுடைய ஜனங்கள்பிரவர்த்தியின் தன்மையும் நிவர்த்தியின் தன்மையும் அறியார்கள். அவர்களிடத்து சுசித்வமும், சதாசாரமும், சத்தியமும், இராவாம்.

௮. அந்த அசுரஸ்வபாவமுடையவர்கள் ஜகத்து அசத்திய மானதும் பிரதிஷ்டையற்றது மென்றும் ஈஸ்வரனற்றதென்றும், இது பரஸ்பரசம்பந்தத்தா லுண்டாக வில்லையென்றும், போகத்தின்பொருட்டு இருப்பதேயன்றிவேறல்லவென்றும்சொல்வார்கள்.

௯. இப்படிப்பட்ட (விபரீத) ஞானத்தை அவலம்பித்து, நஷ்டமடைந்த ஆத்மக்களாய் அற்பபுத்தியுடையோராய், குரூரகர்மிகளும் சத்துருக்களுமாய் ஜகத்தினுடைய நாசத்தின் பொருட்டு பிறக்கின்றனர்.

௧௦. தணிக்கக்கூடாத காமத்தை ஆஶ்ரயித்து, வஞ்சனை, டம்பமான மதங்களோடுங்கூடி பிரவர்த்திக்கின்றனர்.

௧௧. பிரளயத்தையே விளைக்கும், அபரிமிதமான சிந்தையை ஆஶ்ரயித்தவராகி (தமது) கோரிக்கைகளை அனுபவிப்பதே மேன்மையாகக்கொண்டு இவ்வளவேஎன்று நிச்சயித்துக்கொண்டவராகி. (என்றால்சிற்றின்பங்களை அனுபவிப்பதைவிட வேறு கர்த்தவ்வியமில்லையென்று கருதி,)

௧௨. நூறு (அநேக) ஆசாபாசங்களினால்கட்டப்பட்டவராகி, காமக்கிரோத பராயணராய் காமபோகார்த்தம், அந்நியாயத்தினால் அளவற்ற பொருளை சம்பாதிக்க விரும்புகிறார்.

௧௩. "இப்பொழுது என்னால் இது அடையப்பட்டது. இனி அந்தச்சந்தோஷத்

தையும் அடைவேன். இப்பொருளை நான் உண்டாயிருக்கிறேன், அதையும் இனிஅடைவேன்,"

க௪. "இச்சத்துருவென்னால் சம்ஹரிக்கப்பட்டான். மற்றசத்துருக்களையும்சம்ஹரிக்கமாட்டுவேன். நான் ஈஸ்வரன், நான் போகமுடையவன், நான் சம்பன்னன், (பூரணமானவன்) நான்பலவான், நான்சுகமுடையவன்,"

க௫. "தனமுடையவன், குலத்தாற்சிறந்தவன், எனக்கு சமானமானவன், வேறெவன் யிருக்கின்றான், நான் யக்கியஞ்செய்கிறேன், கொடுக்கமாட்டுவேன், நான்சந்தோஷப்படுவேன்"என்று இவ்வாறு அஞ்ஞானத்தால் மோஹிக்கப்பட்டவராய்,

க௬. அநேகவித சித்தவியாகுல முடையவராகி, மோஹபாசங்களால் சூழப்பட்டு, காமானுபவத்தில், ஆசக்தியுடையவராகி, அசுசியானநரகத்தில், வீழ்கிறார்கள்.

க௭. தம்மைத்தாங்களே புகழ்ந்துகொண்டு, பிடிவாதத்தோடுதனமானமதங்களோடுங்கூடினவராகி, நாம மாத்திரையளவான யக்கியங்களினால் ஸாஸ்திரவிருத்தமான பூஜைசெய்கிறார்கள்.

க௮. அஹங்காரம், பலம், தர்ப்பம், காமம், குரோதம், இவைகளை ஆச்ரயித்தவர்களாய், அவர்களிடத்தும் வேறு தேஹங்களிலும் வசிக்கிற என்னைவெறுத்து, தூஷிப்பவர்களாகி எவர்கள் வர்த்திக்கின்றனரோ,

க௯. நான், த்வேஷிகளும், சுபாஹிதரும், ஆகிய இந்தஅதமமானிடரை எப்பொழுதும், அசுரசம்பந்தமான யோனிகளில் வைக்கின்றேன்.

உ0. ஓய் குந்திபுத்திரா! மூடர்கள் பிரதிஜன்மத்திலும் அசுரசம்பந்தமான யோனியை அடைந்து, நிகிருஷ்டமான கதியடைகின்றனர்.

உக. காமக்குரோதலோபமென்கிற மூன்றான இவைகள் நரகத்தின் கபாடங்கள், ஆகையால் தனக்கு நாசகரமான இம்மூன்றையும் விடவேணடும்.

உஉ. ஓய் குந்திபுத்திரா! மூன்றான இந்த நரகத்வாரங்களினால் விடப்பட்ட மானிடன் தனக்குஶ்ரேயசைச் செய்துகொண்டு மோக்ஷத்தையடைகின்றான்.

உ௩. எவன் ஸாஸ்திரவிதியைவிட்டு யதேச்சையாக வர்த்திக்கிறானோ, அவன்சித்திபெறமாட்டான், சுகத்தையும் அடையமாட்டான்.

உ௪. ஆகையால் காரியாகாரிய வித்தியாசங்களில் உனக்கு ஸாஸ்திரம் பிரமாணமாகும். (ஆகையால்) ஸாஸ்திரவிதிகளால் ஏற்பட்ட கர்மத்தை யறிந்து இப்பொழுது செய்யத்தகுவாய்.

## மநுநூல்.

தொடர்சி.

க௩௩. தாயானவள் எல்லாரைக்காட்டிலும் பூஜியதை யுள்ளவளானபோதிலும், தந்தையுடன் பிறந்தவளையும், தாயுடன் பிறந்தவளையும் தனக்குமுன்பிறந்த சகோதரியையும், மாதாவைப் போலவே கௌரவிக்கவேண்டியது.

க௩௪. பட்டணவாசிகள் பத்துவயதுஏற்றத் தாழ்வுள்ளவராயின்அவர்சமானஸ்தர்களென்றும், கீதாதிகளை யறிந்த ஞானிகள் ஐந்து வருஷமுள்ளவராயின் அவர் பரஸ்பரம் சமமானவரென்றும், அத்தியாஞனுஷ்டானபரர் மூன்று வருஷதாரதம்மிய முள்ளவராயின், பரஸ்பரம் சமானமானவரென்றும், தன்குலத்தில்பிறந்தவர் ஸ்வல்பகால தாரதம்மியத்தால் சமானமாவாரென்றும், சொல்லப்படுவர். இக்காலத்துக்கு மேற்பட்டவர்கள்தாம் பெரியவர் என்கிற மரியாதைக்குப்பாத்திரர்.

க௩௫. பத்துவயதுள்ள பிராம்மணனையும், நூறுவயதுள்ள க்ஷத்திரியனையும், முறையே, பிதாபுத்திரர்களாக கிரகிக்கவேண்டியது. அவ்விருவரில், பிராம்ஹணன் தகப்பனைப்போல மரியாதை செய்யப்படத்தக்கவன்..

க௩௬. தனம், பந்துக்களுடன் கூடிவாழ்தல், வயது, சுருதிஸ்மிருதி சோதிதங்களானகர்மானுஷ்டானம், தத்துவக்கியானம், ஆகியஇவ்வைந்தும் முறையேமனிதனது மேலான மரியாதைக்குக் காரணங்களாயிருக்கின்றன. ஆனால் கடைசியில் சொன்ன அம்சமானது எல்லாவற்றிலும் பூஜியமானது.

க௩௭. மூன்று வர்ணங்களில், எந்த

புருஷனிடத்தில் அவ்வைந்து குணங்களும், தொகையிலும், பரிமாணத்திலும், அதிகங்களா யிருக்கின்றனவோ, அவன் சிறந்தமரியாதைக்குப் பாத்திரனாவான். சூத்திரனும் தொண்ணூறுவயது சென்றபின் அப்படியே மரியாதை செய்யப்படத்தக்கவன். (திவிஜராலும்.)

க௩அ. வண்டியில் வருபவனுக்கும், தொண்ணூறுவயதுக்கு மேற்பட்டவனுக்கும், ரோகியாயிருப்பவனுக்கும், சுமைசுமந்து வருபவனுக்கும், ஸ்திரீகளுக்கும், அரசனுக்கும், வேதாத்தியயனம் முடித்து விரதசமாவர்த்தனம் செய்துவந்த ஆசாரியனுக்கும், விவாகம் செய்துகொள்ளப்போகும் வரனுக்கும் மார்க்கம் விட்டு விலகவேண்டும்.

க௩௯. அவர்யாவரும் ஒருங்கவந்தபோது, விரதஸ்நாதனனகுருவும், இராஜாவும், பூசியராவார்கள். இந்த இருவரிலும் இராஜாவைக்காட்டிலும், பிராம்மணனே மாந்நியனாவான்.

க௪0. எந்தத் திவிஜனானவன் தன்சிஷியனை யமைத்து கல்பத்தோடும், ரகசியத்தோடும், வேதத்தைக் கற்பிக்கின்றானோ, அவன்தான் பெரியோரால் ஆசாரியனென்று சொல்லப்படுவன்.

க௪க. தனது ஜீவனத்தின் பொருட்டு வேதத்தில் ஏகதேசத்தையாவது, வேதாகங்களையாவது எவன் அப்பியசிக்கின்றானோ அவன்உபாத்தியாய னெனப்படுவான்.

க௪உ. நிஷேகாதிகளாகியகர்மங்களைச்செய்து, கர்ப்பதானம்செய்தவர் அச்சிசுவுக்குக் குருவென்று சொல்லப்படுவர்.

க௪௩. எவன் ஒருவனுக்காக, ஆகவனீயாதிகளான அக்கினிகள் உண்டுபண்ணி, பாகயக்கியமென்கிற அஷ்டகாதிகளான கர்மங்களையும், வரிக்கப்பட்டவனாயிருந்துகொண்டு செய்கின்றானோ, அவன் ருத்விக்கென்று சொல்லப்படுவான்.

க௪௪. எவன் ஸ்வர வர்ணக்குறைவின்றிக்கே, சத்தியமான வேதத்தால்காதுகளை பூரிக்கின்றானோ, அவன் மாதாவாகவும், பிதாவாகவும் எண்ணப்படத் தக்கவன். அவனுக்கு ஒருபோதும் துரோகம் நினைக்கலாகாது.

க௪௫. ஆசாரியன் உபாத்தியாயனைப்பார்க்கிலும் பத்துமடங்கும், பிதா ஆசாரியனைக்காட்டிலும் நூறுமடங்கும், மாதாபிதாவைக்காட்டிலும் ஆயிரம்மடங்கும், கௌரவத்தினால் அதிகரித்திருக்கின்றனர்.

க௪௬. ஜன்மங்கொடுத்தவரிலும் பிரம்மவித்தியாபிரதானம்செய்யும் ஆசாரியன் சிரேஷ்டன். ஏனெனில் இந்தப்பிரம்மக்கியானமானது இந்தலோகத்திலும் பரலோகத்திலும் சாஸ்வதமானது.

க௪எ. மாதாபிதாக்களது அந்யோந்யகாமத்தாலே உண்டான ஒருவன், அவர்களிடத்திலுண்டான காரணத்தால் மாத்திரம் அவர்களைக்காரணமாக அறியவேண்டியது.

க௪அ. வேதமுழுவதையும் அறிந்த ஆசாரியன் காயத்திரியால் உண்டாக்குகிற ஜாதியானது சத்தியமாயும், ஜனனமரண மற்றதாயுமிருக்கிறது.

க௪௯. ஒருவனுக்கு சாஸ்திரத்தைக் கொஞ்சமா யாவது அதிகமா யாவ்துகற்பித்து தருகிறவன், அவனுக்கு குருவாயிருக்கக்கடவன்.

---

## நிருபங்கள்.

ம-ா-ா- தத்துவபோதினியென்னும்பத்திராதிபருக்கு வந்தனம்.

தத்துவ போதினியின் பிரயோஜனத்தைச் சென்னைமாநகரிலும், சேலத்திலும் அனேகர் அடைந்துவருவதுபோலவேயிப்பிரதேசத்திலுள்ள ஜனங்களும் அடையும்படியாகச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு தத்துவபோதினியின் முக்கிய அபிமானிகளில்ஒருவராகிய வுடுமலைப்பேட்டை டிஸ்டிரிக்டு முன்சீப்கோர்ட்டு வக்கீல்கோயம்புத்தூர்கிருஷ்ணய்யரென்பவர் நேற்றையத்தினம் இந்த வுடுமலைப்பேட்டை சர்க்கார் சத்திரத்தில்ஒருசபை

கூட்டிவித்தார். அச்சபைக்கு ம - ா - ா தாசில்தார் - பவானிசங்கரராயர், ம-ா-ா- முன்சிப்-காசி-விசுவநாத முதலியார், இவர்களும், முன்சீப் கோர்ட்டு உத்தியோகஸ்தர்களும் தாலூகா வுத்தியோகஸ்தர்களும் வர்த்தகர்முதலிய அனேகர்களும் வந்து கூடினர்கள். அப்போது ஷெ முன்சீப் அவர்கள்தத்துவபோதினியின்பிரயோஜனங்களைக் குறித்தும்நோக்கத்தைக்குறித்தும்விரித்துப்பேசினர், அதன்மேல்மேற்படிகோயம்புத்தூர் கிருஷ்ணய்யரும்வக்கீல்முனியப்பபிள்ளையும்- க௮௬௪-ஹு சூலைமாதத்திய தத்துவபோதினியைச் சபையில் வாசித்தார்கள். அதைக் கேட்ட யாவரும் அடைந்த சந்தோஷத்திற் களவில்லை. இந்தப்படியே யிதுமுதல் வாரந்தோறும் சபைக்கூட்டி தத்துவபோதினியை முழுதும்வாசித்து நிறைவேற்ற வேண்டுமென்றும் இதனல் ஜனங்களுக்கு நல்ல அறிவாகரமுண்டாவதற்குவேறு துவுண்டாகுமென்றும் அஞ்ஞானவிருள் நீங்கி மெய்ஞ்ஞான விளக்க முண்டாகுமென்றும் சொல்லிக் கொண்டார்கள். இதன் அபிமானிகள் இந்தச்சபை நிலைபெற்றிருக்கவேண்டியதைக் குறித்தும்தத்துவபோதினியில் பிரசுரமாய்க் கொண்டுவருகிற கடவுள்துதிகளைச் சிலருக்குப் பாடஞ் செய்வித்துச் சபைகூடின வுடனேயும் கலைகிறதற்குப் பூர்வமும் சபையில் பஜனை செய்யவேண்டியதைக் குறித்தும் வேண்டியமுயற்சி செய்துகொண்டு வருவதுமல்லாமல், இந்தச்சபை கூடுவதற்கு ஒருகட்டடம் உண்டுசெய்விக்க முயலுகிறார்கள்.

| | |
|---|---|
| ௬௮௬௬-ஹு பிப்பிரவரிமீ ௧௧௨ | கோயம்புத்தூர்ஜில்லா உடுமலைப்பேட்டை, இப்படிக்கூழியன் சே - சுப்பராமய்யன். |

---

## கோயில் வினவிடை.

### வெண்பா.

கோயில்கட்குப் போய் குணமாம் பரம்
பொருளை,
நேயமாய்த்தோத்திரித்து நிற்காமல் - நா
யகமாந்,
தத்துவபோதினியேதார்விக்கிரகந்தொழு
தால்,
சித்தியிந்தருளுமோசெப்பு.

வினு. வேதசமாஜத்தார், விக்கிராகாராதனைக் கூடாதென்கிற படியால், அப்பொதுகோயில்களை யெல்லாங் குட்டிச்சுவராகச் செய்துவிடவேண்டுமல்லவா? என்றுசிலர்கேட்கிறார்கள்.

விடை. அவர்கள் கருத்து விக்கிரகாராதனை மாத்திரங் கூடாதென்பதேயன்றி, நீர் சொல்லிகிற படி கோயில்களை அழிக்கவேண்டுமென்னுங் கருத்தல்ல.

வினு. அப்படி யானல் கோயில்களிருந்து என்னப்பிரயோஜனம்?

விடை. கோ, இல், என்பது, சிரேஷ்டமுள்ளவீடென்றருத்தமாம். இப்பேர்ப்பட்டபேர் வந்ததற்கு காரணம் சீவர்கள்கூடி ஏகமனதாய் பிரமத்தியானஞ் செய்துபரமானந்தம் அடையும்படியான திறலே தான்.

வினு. மற்றவிடங்களி லென்றால் குடி, இல், குடியிருக்கும் படியானவீடுகளில் பகவத்தியானம்செய்யக்கூடாதோ?

விடை. குடி, இல், குடியிருக்கும் படியான வீடுகளில் பலசம்சாரபந்தங்களால் மனமொருமித்துவராதானதால் கோயில்களுக்குப் போனல் சாதுஜனபழக்கத்தால் ஒருநாழியாவது மனமொருமித்துபகவத்தியானத்தில்நிற்கும். இப்பேர்ப்பட்டபழக்கத்தைநாளுக்குநாள் விருத்திசெய்துக்கொண்டு வருவார்களானல், அவர்கள் கோயில் குடியில் என்கிறவேற்றுமை யில்லாமல் சதா பிரம்மத்தியானத்திலேயே இருப்பார்களென்பதிற் சந்தேகமில்லை.

வினா. கோயில்களில் ஒருவிக்கிரகத்தை வைத்துதியானித்தால்தோஷமென்ன? ஔவையும் ஆலயந்தொழுவதுசாலவுநன்றென்றுகூறியிருப்பதை, நாம்கடக்கலாமா?

விடை. ஔவையார்கருத்தை நீர்செவ்வையாய் தெரிந்துகொள்ளாதபடியால் கோயில்களில் விக்கிரகம் வைத்து தொழுதால் தோஷமென்னவென்று வினவுகிறீர். உம்மைப் போன்றவர்களுடைய கருத்தை அனுசரித்தே பாமரர்களுக்காக ஒருகல்லைகுறியாககோயில்களில்முன்னோர்களால் நாட்டப்போய் அது அந்தமட்டில் நில்லாமல் கூடைக்கல்லும் பிடாரியானதுபோல் பின்னோர்கள் பலரூபங்களை யுண்டாக்கி பலபேர்களைவைத்துபயித்தியக்காரராகி.

வைஷ்ணவர்கள்

## தாழிசை.

செங்கண்மால்கழல் மஞ்சன மவிக்குந்,
தொட்டிசங்கரன்றலைகளே,
சீர்கொள்கண்ண னல்லடி நின்மாலியக்,
குப்பைசம்புவின்றலைகளே,
எங்கள்மாயவன் பாயல்தூக்கிய,
தூக்குமாபதி செவிகளே,
எந்தெழிற்புருடொத்தமன்றுதி,
யெழுதுமேடரனக்களே.
பொங்குசீதரன் எச்சிலராபடிக்,
கம்புராரியின் கண்டமே,
புகலிராமன் தடிக்கொள்பாதுகை,
யகலு முக்கணன்கரமதே,
திங்கள்சூழ் சித்திரகூடமெவிய,
எங்கள் கோவிந்தராஜர்க்குத்,
தினமுமேகூத்தாடி யானவன்,
திருச்சிற்றம்பலவாணனே.—

## வெண்பா.

தூளாய்த் தலைசிதறிச் சுட்டவிடம்புல்முளைத்து,
வாளாப்பெயருமறையாதோ - தாள்வருந்த,
வந்தசிவனுக்கிரங்கி மாயவிருகாசுரனை,
அந்தவரி கொல்லாவிட்டால்:—என்றும்.

சைவர்கள்.

## கட்டளைக்கலிப்பா.

ஏறுகட்டிய கொட்டிலரங்கமே,
ஈரிரண்டுமுகன்வாயிலாயமே,
மாறுகண்ணப்பன்வாஸ மடப்பள்ளியே,
வாய்த்தவோடை திருமால்வதனமே,
வீறுசேர்சிறுத்தொண்ட நில்லாளுந்தி,
வேட்டநற்கரிகாய்ககின்றதோட்டமே,
நாறுபூம் பொழில்சூழ்தில்லையம்பலம்,
நாரிபாகற்கு நாடகசாலையே.

## வெண்பா.

கோடிவிதிமாண்டால் குலாவுகமலக்கண்ணன்,
ஓடிவடபா லுறங்குமே - நாடுங்கால்,
அக்கண்ணர்கோடி யழியி ல்ருணகிரி,
நக்கணருள் சற்றேநகும்.—என்றும்.

வைஷ்ணவர்கள், சைவர்களை பாஷண்டிகளென்றும், சைவர்கள், வைஷ்ணவர்களைச் சண்டாளரென்றும், தூஷித்துஒருவருக்கொருவர், போஜனபிரதிபோஜனமின்றியும், பெண்கொடுக்கல் வாங்கலின்றியும், அஞ்ஞான நூல்களி லழுந்தி, என்தெய்வம் பெரியது உன்தெய்வம் சிறியதென்று வாயில்வந்தபடிக்கெல்லாம்பேசி சண்டையிட்டு உயிர்ச்சேதம் வரையில்நேரிட்டுக்கொண்டிருக்கிறதே, அவ்வைவாக்கியத்தின் கருத்துச்சொல்லுகிறேன் கேளும். ஆலயம், கோயிலுக்குப் போய், தொழுவது கடவுளைவணங்குவதுசாலவு நன்று மிகவும்நன்றென்று முன்னோர்கள் உரை செய்திருப்பது உலகப் பிரசித்தியாயிருக் கின்றதே யன்றி கோயிலுக்குப்போய் கல்முதலான விக்கிரகங்களைத்தொழுவதுமிகவும் நன்றென்றில்லையே. இப்போப்பட்ட வாக்கியங்களை நமதுதந்தைமுதலானவர்கள் நமக்கு பாலியத்திலேயே படிப்பித்திருந்தும், அதன்உண்மை கருத்தை நாம்கிரகித்து நடந்துகொள்ளாமலிருப்பது நமது குற்றமோ அல்லது அதன்கருத்தை யறிந்து போதிக்கு

ம்படியான தயாள குணசீலராகிய வேத சமாஜத்தார் குற்றமோ.

## சிவவாக்கியர்.

அரியுமல்லவரனுமல்ல வயனுமல்லவப்பு ரங்,
கருமைவெண்மைசெம்மையுங் கடந்துநி ன்றகாரணம்,
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணுமாணு மல்லவே,
துரியமுங்கடந்துநின்றதூரதூரதூரமே.

## பட்டணத்துப்பிள்ளை.

உளியிட்ட கல்லையுமொப்பிட்ட சாந்தை யு மூத்தையறப்,
புளியிட்ட செம்பையும்போற்றுகிலேனு யர் பொன்னெனவே,
ஒளியிட்டதாளிரண்டுள்ளே யிருத்துவ துண்மையென்று,
வெளியிட்டடைத்துவைத்தெ னினிமே லொன்றும்வேண்டிலனே.

## திருவள்ளுவர்.

அகரமுதலவெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றேயுலகு.
கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ நற்றாடொழா அரெனின்.

இன்னும் இப்பேர்ப்பட்ட ஞானவான்களின் செய்யுள்வேண்டுமானல் அவர்களருளிச்செய்திருக்கின்ற வேதாந்தநூல்களைப்பார்த்துக் கொள்ளலாம்.

## ஔவையார்

அய்யமிடுமின்ற நெரியைக் கைப்பிடின்,
இவ்வளவேனும் மனத்தையிட்டுண்மின்,
தெய்வம் ஒருவனே யென்று வுணரவல் லீரேல்,
அருவினைகளைந்துமறும்.

வினா. இப்படி யானல் ஒவ்வொரு கோயிலுக்கு, ௫-௬- லட்சம் ரூபாய்வரையில் செலவு செய்து அதில் கல்முதலாகிய விக்கிரகங்களை வைத்திருக்கவேண்டியதென்ன?

விடை. சுமார், ஆயிரவருடங்களுக்கு முன்னிருந்த இத்தேயத்துக் கல்வியில்லாத அரசர்களை பிராமணுள் அடுத்து தாங்கள்மாத்திரம்எப்போதும் பெருமையாயிருக்கும்பொருட்டு கல்வியைத்தங்களுக்குபயோகஞ் செய்து கொண்டும், அதற்குவேண்டிய பூஸ்திதிமானியங்களைப் பெற்றுக்கொண்டும், மற்றவர்கள் கல்வியறிவில்லாமல் எப்போதுந் தங்களுக்குத் தாழ்ந்தஸ்திதியி லிருக்கவும், மோசவெண்ணங்கொண்டு, கல்விக்குபயோகப்பட்டுக் கடவுளறியச்செய்யத்தக்க,கனமாகியபொருளைஒவ்வொருகல்முதலானவைகளுக்கும் பிரயோஜனப் படும்படிசெய்துவிட்டார்கள்.

வினா. அவர்களெண்ணப்படி இப்போது நடக்கத்தடை யேன்உண்டாயிற்று?

விடை. இப்போதிய அரசர்களும்,மற்றவிவேகவான்களும், பணங்களைக்கல்விக் குபயோகப்படுத்தி பஞ்சமர்முதல் பிராம்மணர் வரைக்கும் அறிவு விளங்கச்செய்து கொண்டு வருகிறபடியால்தான்.

வினா. ஆனல் இனி பிராமணர்களுடைய பெருமை குறையுமென்று நினைக்கிறேன்?

விடை. பிரம்ம சுரூபமாகிய பூமியில் வடகண்டமாகியமுகமென்கிறஸ்தானத்தில் பிராமணர் தோன்றினவர்க ளானபடியால் அவர்கள் எப்பொழுதும் சூட்சும புத்தியுள்ளவர்களாயும், பிரம்மானந்தத்தையறிபவர்களாயும், மற்றமூன்று வருணத்தார்களுக்கும் சிரேஷ்டமாகவே யிருப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட சிறப்புகுறைவதற்குப

ஸ்ழைய மோசவெண்ணங் கொள்பவருக்கு நேரிடுமேயன்றி உண்மையை பகிரங்கப்படுத்தும் உத்தமபிராமணர்களுக்கு இன்னும் நாளுக்கு நாள் சிறப்புண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை.

வினா, பஞ்சமர்முதல் பிராமணர்வரையில் பிரமத்தியானமே உண்டானல் அது நியாயமாயிருககுமா?

விடை. பஞ்சமர்முதல் பிராமணர் வரைக்கும், கொலைமுதலிய குற்றஞ் செய்தவர்களுக்கு நியாயஸ்தலத்தில் ஓரேசட்டத்தின்படி தீர்ப்பு செய்துகொண்டுவருவது நமது புத்தி யுத்தி அனுபவத்துக்குச் சரியாயிருக்கும்போது, பிரமத்தியானத்தில் வேற்றுமையாக நடந்துகொள்ளவேண்டியதென்று நினைப்பது நியாயமல்லவே, ஆனதால், பழமொழி, பிரமத்தியான முள்ளவர்க ளெவர்களோ, அவர்களே பிராமணரென்றுஉலகப் பிரசித்தியாக விருக்கிறதே. அதை மறைக்கயாரால் முடியும்.

வினா. ஞானநூலாராய்ச்சியுள்ளவர்களுக்குமாத்திரம் பிரமத்தியானம்சரியேயன்றி, மற்றவர்களும்பிரமத்தியானஞ்செய்வது நியாயமா?

விடை. நீர்சொல்லியதை யோசித்தால் செல்வவான் பொருள் சம்பாதிக்கவேண்டுமேயன்றி, செல்வமில்லாதவன், பொருள்சம்பாதிக்க முயற்சி செய்யாமலல்லவா, இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் வறியவனும் முயற்சியால் பொருள்சம்பாதித்து செல்வவானுகுதலை நாம், அனுபவத்தில்அனேகரைப்பார்த்துக் கொண்டுவருவதுபோல், ஞானமில்லாத பாமரரும், கல்விமுயற்சி செய்தால் பிரமத்தியானம், ஏன்உண்டாகாது, அப்படி உண்டானதின் பிரயோஜனம் அவர்களுக்கில்லாமற் போகுமா?

வினா. அப்பிரயோஜனம் அவர்களுக்கும் இல்லாமற் போகாதென்றே நம்புகிறேன். ஆனல் விக்கிரக மில்லாத கோயில்களுக்குப் போய் எப்படி நடந்து கொள்ளவேண்டுமோ அதைத் தெரிவிக்கவேண்டும்?

விடை. விவேகசிந்தாமணிவிருத்தம்.

தண்டாமரையினுடன்பிறந்தே
  தண்டேனுகராமண்கேம்,
வண்டே கானத்திடையிருந்து
  வந்தே கமலமதுவுண்ணும்.
பண்டேபழகியிருந்தாலும்
  அறியார்புல்லோர் நல்லோரைக்,
கண்டே களித்தங்குறவாடி
  தம்மிற் கலப்பார் கற்ருேரோ.

என்னுஞ் செய்யுளின் கருத்தை நமது தேசத்தார் கருத்தில்வைத்து தவக்கினைப் போலாகாமல் இதரதேசத்தாராகிய வண்டுபோலிருந்து, கிருஸ்துமதஸ்தரும், மகம்மதுமதஸ்தரும், சற்சுகளுக்கும், மசூதிகளுக்கும் போய், தங்கள் தங்கள்வேதத்தில், சொல்லியிருக்கிறபடி ஓரேவிதமாக கடவுள் தியானஞ்செய்வதுபோல், வியாசமார்க்கத்தாராகிய நாமும் நமது கோயில்களுக்குப்போய் வேதங்களாலும், ஞானவான்களாலும் சொல்லியிருக்கும் படியான பிரமத்தியானத்தையும், செய்யுளையும், ஏகமனதாய் தியானிப்பதே உண்மையும் பிரயோசனமும் உண்டாக்குமென்பதிற் சந்தேகமில்லை.

வேதோக்தமான,

ஸ்தோத்திரங்கள்.

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரகர்த்திருக, மோக்ஷபிரத, சர்வக்கிய, சர்வசக்த, ஆநந்தமய, ஸத்ஸ்வரூப, அதிருசிய, அத்விதீய, ஏக, பரமபுருஷனுகியகடவுளே, நினையன்பாலும், நின்பொருட்டுச்செய்யப்படும் சத்கர்மங்களாலும்வணங்குகின்ருேம்.

எவன்யாவற்றையும்விளங்கச்செய்கின்ருனே எவன் எல்லாவற்றையும் ரக்ஷிக்கி

ருனே, எவனிடத்தினின்று யாவும் ஜனிக்கின்றனவோ, எவனிடத்து யாவுமீண்டு லயிக்கின்றனவோ, மோக்ஷத்தின் பொருட்டு, நமது மனோவிருத்திகளைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி எவன் உதவுகிருனே, அப்படிப்பட்ட திவ்வியசவிதாவினுடைய பரமபதத்தை மென்மேலும்கொண்டாடித் தொழுவோமாக.

## குடும்பவந்தனம்

ஓம்பரவ்ரும்ஹணே நமஃ.

இல்லின்பங்களோடும் ஆசா பாசங்களோடு மெம்மை இக்குடும்பத்தி லொன்ருகச்சேர விருத்தியகடவுளே! நின்னை அணுகி துதிசெலுத்த உதவுவாய். எமதுயிர்த்துணை நீயே. அளவற்றநன்மைசொரியுந்தயாளுவும்நீயே. உன்னைஎமதுபிதாவென்றழைத்துபுத்திரவாச்சல்லியத்தோடும் உன்முன் விழுந்துவணங்க வருளியதே யாம்பெற்றபேறுகளிலெல்லாம் பெரிதென்று கருதுகிருேம். நினதநந்த கருணையை யாங்கள்என்றும் மறவாதிருப்போமாக. இப்பிரபஞ்சாதிபதியும், பரமண்டலத்துக்குக் கர்த்தனும்ஆகிய நீ எமது இருதயமாகிய இந்தச்சிறு வாலயத்திலும் வந்துநின்றுயாங்கள் செய்யும் பிரார்த்தனைக ளனைத்தையுங் கைக்கொள்ளுகின்றனை, என்பதை யுன்னியாங்களென்றும்சந்தோஷிப்போமாக. எம்மில்ஒவ்வொருவரது ஆசாபாசங்களும் நினது திருவடியுற்று எமதுபரஸ்பரசம்மந்தமானதுஇளமையும் வன்மையு முடையதாகும்படியருள்வாய். எங்களுக்குள் பரஸ்பரநேயத்தை விருத்திசெய்து ஸ்வப்பிரயோஜனம், பொருமை துஷ்டசிந்தை இவைகளையுண்டாக்கத்தக்க துர்குணங்களெல்லாம் அகற்றுவாய். எமது இல்லறவின்பங்களனைத்திலும் நினை நன்றியோடு நினைப்போமாக. எமது இல்லறத்துன்பங்களிலும்எமதுநலம் எல்லாம் நீயேயெனக்கருதிநின்னையே நம்புவோமாக. எமைப்பெற்ற அன்னைபோல் அன்போடு யூட்டி வளர்க்கும் நட்புள்ளகடவுளே! நினது பிள்ளைகளின் ஆன்மாக்களை என்றும் ரக்ஷிப்பாய். யாங்கள் பிசகியகாலத்தில் எம்மைத்தண்டிப்பாய். யாங்கள் வழிதப்பிப்போவோமானல் மீண்டு மெம்மைசீர்படுத்துவாய். எமதுமனம் அசுத்தமனுகாமலும் எமது கரங்கள் அனிருதங்களைச் செய்யாமலிருக்க உதவுவாய். சாந்தமும்,அடக்கமுமருளி பலவிசித்திரமாகிய மாயவாழ்க்கைக்காயுத்தப் படுத்துவாய். யாங்களுனது அடக்கமுள்ளபிள்ளைகளாயும் நேர்மையுள்ளசேவகராயும் வாழ்வோமாக. இக்குடும்பத்துக்குக்கர்த்தாநீயே. இந்தவீடுபெருநட்பும் சுத்தமும் சுகமும், அமைதியும் பரஸ்பரநேயமும் என்றும் வாழும் இடமாகும்படிஆசீர்வதிப்பாய். இக்குடும்பம் வாழிய. ஓகர்த்தனே! இதை யுன்குடும்பமாக்கிக்கொள்வாய். பூமிமீதுஎல்லாகுடும்பங்களுக்கும் தந்தையே! எங்கும் உனது பிரபாவம்நிறைந்து நினதுபிள்ளைகளனைவரும் உன்கிருபை யடைந்துனக்குள்ஐக்கிய மடையவருள்வாய். யாங்களென்றும் நின்னவராகும்படி எமதுமனதையும் ஆன்மாவையும் நினக்கற்பிதமாக்குகின்றனம். ஓம்தத்ஸத்.

## தாயுமானவர்-விருத்தம்

ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்க
ட்டி யாளினுங்கடல்மீதிலே,
ஆணைசெலவெநினைவா ரளகேசநிகராக
அம்பொன்மிகவைத்தபேரும்,

நேசித்துரசவாதவித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரும்,

நிலையாகவேயினுங்காய்கற்பந்தேடி
நெஞ்சு புண்ணுவரெல்லாம்,

யோசிக்கும்வேளையிற் பசிதீரஉண்பதும்
உறங்குவதுமாகமுடியும்,

உள்ளதெபோது நானெனக் குளறியே
யொன்றைவிட்டொன்றுபற்றிப்,

பாசக்கடற்குளேவீழாமல் மனதற்ற
பரிசுத்தநிலையை யருள்வாய்,
பார்க்குமிடமெங்கு மொருநீக்கமறநிறை
கின்ற பரிபூரணனந்தமே.

இவ்வகைப்பட்ட ஸ்தோத்திரங்களும் பாசுரங்களும் கோயில்களில் பத்தியுடன் போற்றிக்கொண்டு வருவோமாக.

## விருத்தம்.

பிரமா விஷ்ணு ருத்திரனும்
பேறுமகேஸ்வரசதாசிவனும்,
பெருமைப் பூதவியற்பெயராய்
பெட்போடொளிருமொருபொருளை,
பரமென்றுணராப்பேதையர்கள்
பலரூபங்களேற்படுத்தி,
ஒருவர்க்கொருவர் பிடித்தடித்தே
உயிர்போங்கால மொழிந்ததம்மா.

கஅகூகூ௵ ஜனவரிமீ௰டுவ பெங்களூர். } இங்ஙனம் அறிவோர்க்கன்பன், ஆ - ஐயாசாமிமூலியார்.

---

இத்தலமேத்தும்
தத்துவபோதினிக்
கர்த்தரவர்கட்கு
நித்தவந்தனம்.

அன்புள்ள ஐயாவே,

அடியில்வரும் சிலவரிகளுக்கு தங்கள் அருமைபானதத்தத்துவபோதினியில்இடந்தரக்கேட்டுக்கொள்ளுகிறேம்.

அஃதென்னவெனில்

அறிவுள்ளவர்களைப்போலக் காண்கின்ற சிலரும், மற்றவர்கள்சிலரும் விவேகசிகாமணிகளாகிய வேதசமாஜத்தார்பெண்களுக்குக்கல்வியும் புநர்விவாகமும், உபயோகப்படுத்துவது நல்லதென்று பேசுகிறுர்களே அவை சரியாவென்கிறுர்கள்.

அப்பேர்பட்ட கனவான்களுக்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டியதவசியமல்லவா. இந்தவேதசமாஜத்தார் ஏற்பட்டுசுமார் ஒன்றரைவருடமாகின்றது. இதற்குமுன்பே, நம்மையாளும் துரைத்தனத்தாரும்நமதுதேசத்து விவேகிகள்யாவரும் பெண்களுக்குக்கல்விக்கற்றுக்கொடுத்தும், புநர்விவாகம் நடப்பித்தும் வருகிறுர்கள். இவைகளுக் குதவியாக கெவர்ன்மெண்டாரும் சட்டங்களேற்படுத்தியிருக்கிறுர்களே.

இவைகளினுடைய பிரயோசனங்தெரிந்தவர்களிற் சிலரும்,தெரிந்துக்கொள்ளாதவர்களிற் சிலரும், எங்கள் அப்பன் குடியன், கூத்திகள்ளனைதால் நானுங்குடிப்பேன் கூத்தியாரைவைப்பேனென்று சொல்பவரைப்போல்,எங்களப்பன்நாளையில் செய்யாதகாரியங்களை நான் செய்யமாட்டேனென்று இவ்விரண்டுக்குமாத்திரம்சொல்லும்பிடிவாதமுள்ளவர்களுடைய (கல்லைத்தொழும்) கல்மனதைக் கரையும்படியாக பலவித நயபயங்களையும், கீர்த்திஅபகீர்த்திகளையும் திருஷ்டாந்தங்களோடு யுக்தி புத்தி அனுபவத்துக்குச்சரியாய் சொல்வதால்அவைகளின்பிரயோசனத்தைக் கிரகித்து நடந்துகொள்வதைவிட்டு அவர்களைத்தூஷிக்கத்தலைப்பட்டால் அவர்களேழ்மை புத்திக்கு எதை உபமானஞ்சொல்லலாம்.

உ-வது-வேதசமாஜத்தாராவது மற்றசீமான்களாவது ஏற்பட்டு புநர்விவாகஞ் செய்துக்கொள்ள இஷ்டமில்லாப்பெண்களுக்குப் புநர்விவாகஞ்செய்வித்தாலும் அல்லது புநர்விவாகஞ் செய்துகொள்ள இஷ்டமுள்ளபெண்களுக்கு புநர்விவகஞ் செய்விக்காம லிருந்தாலும் உண்டாகும் பாபத்தையும், புண்ணியத்தையும்இதைப்படிக்குங் கல்விமான்களாகிய குணவான்களேபகுத்தறிவார்களென்றும்இதற்கு மேல் தங்கள்தங்கள்கருத்தை வெளிப்படுத்து வார்களென்றும் நம்பி இவ்வளவில் நிறுத்தினேம்.

கஅகூகூ௵ ஜனவரிமீ௰கூவ பெங்களூர், } இங்ஙனம் நலங்கோருவோராகிய இந்துக்கள்.

---

ம - ா - ா - ஸ்ரீ -

சென்னப்பட்டணம்.

சத்தியமே-சக்தி,
தத்துவமே-சித்தி,

என்னும்
தத்துவபோதினிக்
கர்த்தரவர்களுக்கு
அநேகவந்தனம்.

ஐயா - நம்துஇஷ்டர்அழைப்பித்துக்கொ

டுத்த விவேகசிகாமணிகளாகிய வேதசமாஜ
வெகுவினயமுள்ள விண்ணப்பத்தைப்படித்
துப்பார்க்கும்போது அவைகளில் அடங்கியி
ருக்கும்முக்கியசங்கதிகளெல்லாம் பகுத்து
ரைக்கவேண்டுமானால் அவ்வேதசமாஜத்தா
ரைப்போன்ற விவேகிகளுக்கே உரித்தாகும்.
அப்படிப்பட்டதில் அன்பர்கள் அற்ப அறிவு
க்கியன்றமாத்திரம் அறைய அவர்கொண்ட
படியால் மற்றவைகளை அறிவுளோர் அறிந்
துகொள்வார்களென்று நம்புகிறோம்.

அக்கருத்தென்னவெனில்

* சுருதி, ஸ்மிருதி, புராணம், ஆகமங்களி
ன் பெருமைகளும், அதுகளில் சுருதிக்குமா
றுபடாமலிருக்கிற வாக்கியங்களை மாத்திர
ம், ஸ்மிருதி புராணம் ஆகமங்களில் கிறகிக்
கலாமென்றும் மாறுப்பட்டிருக்குமாகில் அ
வ்வாகியங்களைக் கிறகிக்கக்கூடாதென்றும்
வேதத்தில் சொல்லியிருப்பது பிரமத்தியா
னமே என்றும் விக்கிரகாராதனஞ் சொல்
லவில்லையென்றும் சிலவருஷங்களுக்கு மு
ன்னே கல்வியேயில்லாத மூடர்களாயிருந்த
சூத்திரர்களுக்கு கபடபிராமணுள் கட்டி
வைத்த கதையின்படியே, கல்முதலான வி
க்கிரகங்களேற்பட்டு அதன்கொடிகள் நா
ளாவர்த்தியில், மற்றவர்கள்மனமாகியகொ
ழுக்கொம்புகளிலும் ஏறிப்படர்ந்து கனமா
கிய அஞ்ஞானஇருள்கவிழ்ந்து கொண்டதெ
ன்றும் அக்காடுகளைஅழித்து அளவற்றபிரம
த்தியானமாகிய விரையை விரைத்துவிளைய
ச்செய்யவேண்டுமென்றும் இந்த சன்மார்க்
கத்தை நமது தேசத்தோர் அன்புடன் அனு
சரிப்பார்களாகில், அழிவில்லாதபரப்பிரும்
மத்தின் அருள்பெற்று ஆனந்த மடைவார்க
ளென்றும் விளங்குகின்றது.

இப்பேர்ப்பட்ட நூல் நமதுதேசத்தாருக்
குக் கிடைத்ததையோசிக்குங்கால் தாகமு
ள்ளவர்களுக்குத் தடாகங் கிடைத்ததுபோ
லும் வெயிலிலடிப்பட்டவர்களுக்கு விருக்ஷ
ம் எதிரிட்டதுபோலும் மழையில் நனைந்தவ
ர்களுக்கு மண்டபந்தோன்றியதுபோலும்க
ண்ணிழந்தவர்களுக்கு கண் தெரிந்ததுபோ
லும், முடவர்களுக்குக் கொம்புத்தேன் கி
டைத்ததுபோலும், தாயிழந்தபிள்ளைக்குதா
ய்வந்ததுபோலும், இருப்பதுமன்றி, காந்த
ம், ஊசிகளை இழுத்துக்கொள்வதுபோல் அ
ந்நூலை வாசித்தோர்கருத்தை தன்வழிகிரகி
த்து அருள்பெறச்செய்யுமென்பதில் சந்தே
கமில்லை.

* சுருதிஎன்பதுவேதம், ஸ்மிருதிஎன்பது
சாஸ்திரம்.

இத்தன்மையுடைய நூலாகிய விண்ணப்
பத்துக்கு முன்னே, சிலபண்டிதர்முதலான
வர்கள் எழுதிய, கண்டனபுத்தகத்தையும் க
டந்தபிப்பிரவரி௴ எடபத்திரிகையில் (மெய்
மைகூறுவோன்) என்பவர் தான் கொண்ட
பேருக்கு மாறுபட்டு, சர்வசிரேஷ்டமாகிய
பரப்பிரம்மத்தை, விட்டு பஞ்ச பூதங்களி
லொன்றென்னும் அப்புஅம்சமாகிய விஷ்ணு
வை பரமாகச்சுட்டி, விரிவான கதைகளைக்க
ட்டி சொல்லியிருப்பதையும், இன்னுங் கண்
டனம் எழுதவேணுமென்று சொல்லுஞ்சில
கனவான்கள்கருத்தையும் யோசிக்கும்போ
துஎப்படியிருக்கிறதென்றால்.

சர்வசிரேஷ்டமாகிய வேதங்களாலும் அ
ருள்பெற்ற பரமாசாரியர்களுடைய சாஸ்
திரங்களாலும், சொல்லப்பட்டதும், எங்கு
ம் நிறைந்திருக்கும், அழிவில்லாத பரப்பிரு
ம்மத்தியானத்தை * பஞ்சபூதா சாரியர்க
ளாகிய கபடபிராமணுள் கட்டுக்கதைகளெ
ன்கிற புராணங்களாலும், அதைநம்பி ஒன்
றுக்கு நூறுகப்பாடியிருக்கும் ஆண்டிதாதர்
பாடலாலும், பெருமைபெற்ற இன்றைக்கி
ருந்தும் நாளைக்கில்லாமல் அழியும்படியான
பொம்மைகளால் மறைக்க எண்ணங்கொள்
ளுகிறபடியால் அவர்களெண்ணம் எப்படி
முடியுமென்றால் அம்பரமட்டும் கொழுந்து
விட்டெரியும் அக்கினியை அநேகசருகுகளை
க்கொண்டு அவிக்கப்பிரயத்தினப்படும் புத்
திமான்களை நிகர்ப்பார்களென்பதில் சந்தே
கமில்லையென்று நாங்கள் சொல்லவேண்டு
மோ.

இதுநிற்க நம்முடையவேதசமாஜத்தாரை
நாங்கள் வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுவ
தென்னவெனில் மேற்படி வேதசமாஜவிண்
ணப்பத்தை தெலுங்கிலும் மொழிபெயர்த்
து பிரசுரஞ்செய்யும்படியாகத்தான்.

| | |
|---|---|
| ௧௮௬௬ ௵ | இங்ஙனம் |
| பிப்பிரவரி௴ ௰௫௳ | தங்கள் விதேயராகிய |
| பெங்களூர், | உண்மையுரைப்போர் |

---

சத்தப்பிரகரணம்.

இத்தலமெத்தும்
தத்துவபோதினி
கர்த்தரவர்கட்
கனந்தவந்தனம்.

* பஞ்சபூதாசாரிகள், என்பது, மண், நீ
ர், தீ, வாயு, வெளிஇவைகளை, பிரம்மா, வி
ஷ்ணு, சிவன், மயேஸ்வரன், சதாசிவன், எ
ன்கிறபெயரிட்டு ஒருவருக்கொருவர் வாதா
டிமகத்துவம் கற்பிப்போர்.

ஐயா,

நம்மவர்களில், விவேகிகளென்றெண்ணத்தக்கவர்களிற் சிலரும், மற்றவர்களிற்பலரும், (அந்நியமதஸ்ர் சொல்லும் சில வார்த்தைகளைக் கேட்டிருப்பவர்களாதலால் அதைப்போல்) வேதசமாஜத்தாரும் சொல்ல ஆரம்பித்தார்களே இதுநியாயமல்லவென்று பேசிக்கொள்ளுகிறார்கள், அப்பேர்ப்பட்ட கனவான்களுக்கு இரண்டொரு திருஷ்டாந்தம் தெரிவிக்கவேண்டியது, அவசியமல்லவா ?

அதென்னவெனில்,

நமது வீட்டுக்கு அக்கம்பக்கத்தி லிருக்கும் வீட்டுகளில் இருக்கும்படியான அந்நியர்கள், (நமதுபெரியோர்கள் பொய்யே இல்லாமல் மெய்யே பேசிக் கொண்டிருந்ததைக்)கண்டு அவர்களும், சில மெய்பேச ஆரம்பித்தால் அதைக்கண்டு நாம்கொஞ்சம் சந்தோஷப்படவேண்டியதை விட்டு அவர்கள் பேரில் பொறாமைகொண்டு நாம்மெய்பேசுவதைவிட்டு பொய்பேச ஆரம்பித்தால்எப்படியோ அப்படியல்லவா மேற்கண்டவர்கள் கருத்துமுடியும்.

இதுநிற்க, விவேகசிகாமணிகளாகிய வேதசமாஜத்தார், உலகோபகாரமாகப் பஹிரங்கஞ் செய்யும்படியான, சன்மார்க்கம் அவர்களுடைய நூதன கருத்தல்லவென்றும், அதுநம்முன்னோர்களில் சிறந்தோர்கருத்தென்றும் தெரிந்துகொள்ளும் பொருட்டு வேதாந்தபரம்பரை சேஷகிரிசுவாமிகள் மன்னாரபாகவதரவர்கள், மரபிற்செய்யப்பட்ட சத்தப்பிரகரணத்தில் சில எழுதுகிறேன்.

———

ஓம்பிரும்மமேநம:.

சத்தப்பிரகரணம்.

குருஸ்துதி.

பிரமாநந்த ஸ்வரூபமாகியும்,சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞானவடிவமாகியும், பிரபஞ்சாதிதமாகியும்,ஆகாசத்துக்குச் சமானமாகியும், மகாவாக்கியங்களுக்கு லக்ஷியார்த்தமாகியும், ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் சாக்ஷிமாத்திரமாகியும், பாவனைகளுக்கப்புறப்பட்டதாகியும், முக்குணங்களு மில்லாததாகியுமிருக்கின்ற பரமசற்குருவை நமஸ்காரம் பண்ணுகிறேன்.

இரண்டாவது.

## சாதன சதுஷ்டயப்பிரக்ரணம்]

முற்பிரகரணத்தில் கற்பனாரூபமானவிஷயங்களைப் பிரியமாக விசுவசித்து அதிற் சுழலாநின்ற மநோவிருத்திக்கு அவைகள் துன்பமெனத்தெரிவித்து அவ்விருத்தியை விஷயசுகங்களினின்று நீக்கி மேல் யதார்த்தசுகத்தில் பிரியம்வைக்கும்படிசெய்து அதனாலுண்டான சிரத்தாபத்தியினால் சித்தசுத்தியுண்டாக்கிப்பின்பு அவயதார்த்தம் வெளிபடுதற்கேதுவான சாதன சதுஷ்டயப் பிரகரணம் நிரூபிக்கிறார்.

எந்தச்சாதனசதுஷ்டயசம்பத்தியினால்யாவரும் மோக்ஷம் அடைவார்களோ, அதில்நித்தியாநித்தியவஸ்துவிவேகமென்பது, பிரமமேநித்தியவஸ்து, சுகம் அநித்தியவஸ்துவெனப்பகுத்தறிவதாம்.

இச்சுகம் அநித்தியமென்பதெப்படியென்றால், இவை பூதபவுதிகாத்மகமானபடியால் அநித்தியமேயாம். இங்ஙனம் பூதபவுதிகாத்மகமாகத் தோற்றப்படுகிற சுகத்தின் முன்னே பவுதிகங்களுக்கு அநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அப்பவுதிகமாவது என்னவெனில், நால்வகையோனி, எழுவகைத் தோற்றம் எண்பத்துநான்குலக்ஷம் பேதங்களாயுள்ள சரீரங்களாம்.

அவற்றில், நால்வகை யோனி என்பது சராயுசம், அண்டசம், சுவேதசம், ஹபிசம், என்பனவாம்.

இவற்றில்,பையிற்கட்டுப்பட்டுபிறப்பதுசராயுசமும்- முட்டையிற்கட்டுப்பட்டுப்பிறப்பதுஅண்டசமும் - வியாவைஇடமாகப்பிறப்பது சுவேதசமும் - பூமிஇடமாகப்பிறப்பது ஹபிசமும் - ஆம்.

எழுவகைத் தோற்றமென்பது, தேவரும் மானிடரும், மிருகமும், பட்சிகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும், தாபரங்களும் ஆம்.

எண்பத்துநான்குலக்ஷம் பேதமென்பது, தேவபேதம், பதினாலுலக்ஷமும், மானிடபேதம், ஒன்பது லக்ஷமும், மிருகபேதம் பத்துலக்ஷமும், பட்சிபேதம் பத்துலக்ஷமும், ஊர்வனபேதம் பதினொரு லக்ஷமும், நீர்வாழ்வனபேதம் பத்து லக்ஷமும், தாபர பேதம் பதினெட்டுலக்ஷமும் ஆம்.

இவற்றில், தேவர், கந்தருவர், சித்தர், சா

த்தியர், கின்னரர், கிம்புருடர், குய்யகர், வித்தியாதரர், யக்ஷர், ராக்ஷசர், பூதப்பிரேத பிசாச சாகினி, டாகினி, வேதாள ஆதியான தேவ சரீரங்களும், மனுமாந்தாதி சக்கிரவர்த்தி, பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்முதலான நரசரீரங்களும், காமதேனு, சிம்மமுதலிய மிருகசரீரங்களும், அன்னம், கருடன்முதலான பக்ஷிசரீரங்களும், சேஷன், எரும்பு முதலிய ஊர்வனசரீரங்களும், மகர, மச்சம், கூர்மமுதலிய நீர்வாழ்வன சரீரங்களும், கற்பகவிருக்ஷம், பாரிசாத முதலிய தாபர சரீரங்களும் ஆம்.

பூர்வத்தில் இத்தேவர்முதலிய எண்பத்துநான்குலக்ஷம் பேதமாயுள்ள சரீரங்களும், நசித்துப்போனது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோம். ஆனதாலும், இப்படியே சத்தியவரத்தமான காலத்திலுமிருக்கிற மாதாபிதா முதலான சகலசரீரங்களும், நசிப்பதுபிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறதாலும், இனிப் பிறக்கப் போகிற சகலசரீரங்களும் இப்படியே நசிக்குமென்று தோற்றப்படுகிற தாலும், இந்தப்பவுதிகமான சகலசரீரங்களும் அநித்திய மென்பது சித்தம்.

இப்படியே, பிர்மா, விஷ்ணு, சிவன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் பிருதுவியாதிபஞ்சபூதங்களும் அநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அவைகளெப்படி நசிக்கிறதென்றால், பிரமபிரளயம் வருகிறகாலத்தில், பனிரெண்டு சூரியர் ஏககாலத்தில் உதயமாய் நூறுவருஷம் மழையில்லாமல் எரித்து சகத்தெல்லாம் பஸ்மம்பண்ணி பூமியிலிராநின்ற அஷ்டமா நரகங்களுடைய மகுடங்களை பஸ்பம்பண்ணுகிறபோது அந்த நரகங்களுடையமுகங்களிலிருந்து காளகூடவிஷாக்கினி பிறந்து அந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங் கூடி அந்த அஷ்டமாநரகங்களையும், பனிரெண்டு சூரியர்களையும், பஸ்பம்பண்ணி அப்படி பஸ்பம்பண்ணின அக்கினியினின்றும் சத்தமகரமேகங்கள்பிறந்து நூறுவருஷம் யானைத்துதிக்கைப்போல் வருஷதாரைகள் வருஷிக்கும். அந்த வருஷஜலமே காரணமாய் நிற்கும். அந்தச்சலத்தில் அப்பூமி பஸ்பம் லீநமாகும். அப்போதந்தச்சலம் வாயுஸ்தம்பமாய்நிற்கும். அப்படி நிற்கின்றசலத்தில் வடவான்லம்பிறந்து அந்த ஏகாரணவமான சலமெல்லாங் கிரகிக்கும் அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவில், லீநமாகும். அந்த வாயுவும் ஆகாசத்தில் லீநமாகும் - அவ்வாகாசமும் அஞ்ஞானத்தில் லீநமாகும் - அவ்வஞ்ஞானமும் பிரம்மத்தில் லீநமாகும் - அப்பிரமம், ஒன்றுமே சேஷித்துநிற்கும். ஆனதால பஞ்சபூத பவுதிகாத்மகமான சகத்து அநித்தியமென்று சொன்னதும், இப்படி சேஷித்துநின்ற பிரம்மத்துக்கு வேறேகாரணமில்லாதபடியால் பிரம்மமே, நித்தியமென்று சொன்னதும் சித்தம்.

அப்பேர்ப்பட்ட பிரும்மத்தைஅடையவேண்டுமென்பதற்கு திருஷ்டாந்தம்.

பசிக்குஅன்னம்வேண்டியவனும்அதற்குச் சாதகமான, இடம், விறகு பாத்திரம், ஜலம், அரிசி, இவைகளிருக்கினும், பசியைப் போக்கடிக்கமாட்டாது. இவைகளுடனே அக்கினி ஒன்றுகூடினால் அவ்வரிசையை அன்னமாகப்பாகம்பண்ணி அச்சாதனங்களுடனே தானு நாட்டமாய்ச் சாடராக்கினிரூபமாயிருந்துகொண்டு முன் பாகம்பண்ணின அன்னத்தைப்புசித்துப்பசிநீங்கிஅச்சாடராக்கினியுந் திருத்தி ஆகாரமாயெப்படி சுகமாயிற்றோ அப்படியே,

ஆத்மவிசாரமென்னும் அக்கினிபிறந்து குருவென்கிறவிடத்தில் வியாபித்து, வேதாந்தசாஸ்திரமென்கிற விறகினாற் பிரகாசித்து மானிடஜென்மமென்கிற பாத்திரத்தில், சாந்தகுணமென்கிற சிலத்திறசையோகமாய், அறிவென்கிற அரிசியைப்பாகம்பண்ணிஅவ்விசாராக்கினியு முன்னுள்ள சாதனங்களோடு நாட்டமாய்த் தான்சமைத்த பூர்ணமான அன்னத்தைப் புசித்து சநநமரணமென்கிற துக்கமானபசிநீங்கி, தனக்கெதிரில்லாத, அத்துவிதானந்ததிருத்தியை யடைந்து,

அத்திருத்தியினாற் சலத்திலுண்டான உப்புச்சலா காரமாவதுபோல் ஞானானந்தத்திலுண்டானவிசாரமும் ஞானானந்தகாரமாய் மோக்ஷம் அடையவேண்டுமென்பதே.

## நேரிசைவெண்பா.

அத்துவிதமுன்னோ ரருளியதையோராதார்,
கத்துவிதமிப்போ தரிவிக்கும்-உத்தமநம்,
வேதசமாஜத்தாரை வீணாகத்தூற்றுவதேன்,
ஏதுமறியாவேழைகாள்.

### இதன்பொருள்.

பதம். — பொருள்.

அத்துவிதம் :—மேற்சொல்லிய பிரகாரம் அத்துவிதசாஸ்திரங்கள்.
முன்னோர் :—சான்றோர்கள்.
அருளியதை:—கிருபைசெய்திருப்பவைகளை
ஓராதார்க்கு:—உணர்ந்துகொள்ளா திருப்பவர்களுக்கு.
அத்துவிதம் :—அந்தஅத்விதக் கருத்துகளை.
இப்போது :—இக்காலத்தில்.

அறிவிக்கும்:—(கைம்மாறுவேண்டாமல்)தெரிவிக்கும்படியான.
உத்தமனம்:—நம்-உத்தமர்களாகிய.
வேதசமாஜத்தாரை { வேதங்களில்சொல்லியபடி நடக்கவும் நடத்தமுயலும் சபையாரை.
வீணுக:—விருதாவாகத்.
தூற்றுவதேன்—தூஷிப்பதென்னநியாமோ.
ஏதும்:—நன்றிதுவென்றும், தீதிதுவென்றும்.
அறியா:—அறியுந்திறமில்லாத.
ஏழைகாள்:—ஏழைகளே.

என்பதாம்.

| | |
|---|---|
| க௮௲௲௯ | இங்ஙனம். |
| பிப்பரவரிமீ | அறிவோர்க்கன்பன், |
| ௰௲௨ | ஆ-ஐய்யாசாமிமுதலியார். |
| பெங்களூர். | |

---

ஓம் நமஃஸவாஸாதெந.

அத்துவிதீய பரமாத்துமாவினது சுவரூபமான சுத்ததத்துவத்தையே நாமமாகக்கொண்டு சத்தியமேவஜயதே நா நீருதம்யென்னும் திலகத்தை யணிந்து எல்லோரிடவிவேகவிருத்தியினிமித்தம் பிரதிமாதமும் வருனின்றதத்துவபோதினியே. யான்வரையுஞ் சிலவசனங்களை யனுதிரவின்றி முழுதும்வரையத்தமதவயவற்றிற் சிறிதிடந்தரவேண்டும்.

தம்மையாதரிக்கும் வேதசமாஜத்தாரின் கொள்கையானது யாதொரு சமயவாதத்துக்குமிடந்தருமல் சுத்ததத்துவசுவரூபியான அத்துவிதீயபரமாத்துமாவின் மகிமையையும் அவரையுபாசிக்கும் மார்க்கத்தையும் தெரிவிப்பதாக விருப்பதுயாவருக்குந் தெரிந்த விஷயம். கடந்தசஞ்சிகையில் நிருபமெழுதியிருக்கும் மெய்மை கூறுவோ னென்பவர் வேதசமாஜத்தாரின் கொள்கை தவருனதென்று கிரகித்து யவர்களை யிகழ்வதுடன் கூட ஸ்ரீமத்வேதமூர்த்தி சங்கராசாரியரையும் ஸ்ரீருத்திர பகவானையும் இராமானுஜமதத்தில் சேராதவர்களையு மிகவும் மனத்துணிவுடன் நிந்திக்குருர். இந்த நிந்தையானது யாவருக்கும் மனவருத்தத்தை யுண்டுபண்ணத்தக்கதாயிருக்க வேதசமாஜத்தார் கவுரவிக்கத்தகாததை கவுரவித்தும் நிந்திக்கத்தகாததை நிந்தித்தும் வரத்துடங்கியதுதனக்கும் மற்றபுத்திமான்களுக்கும் மனவருத்தத்தை வருவிப்பதாக வெளியிட்டிருப்பது மிகவும் அதிசயோக்தியாகவிருக்கிறது. வேதசமாஜத்தாரின் கொள்கை புத்திமான்களுக்கும் விவேகிகளுக்கும் பிரியமாகுமேதவிர அபிரியமாகாது. மெய்மைகூறுவோனென்று பெயரிட்டுக் கொண்ட யிந்த வித்துவான் பாமூருக்கு நரிராஜாவென்னும் பழமொழியைப்போல் மூடஜனங்களை மலைக்கச்செய்வதில் பயன்படுவாரேயன்றி யிவரிடவார்த்தைகளில்ஒன்ருவதுபுத்திமான்களுக்குப்பிரியமாகமாட்டாது.

அர்ச்சையைப்பற்றிய ஆக்ஷேபசமாதானங்கள் முழுதும் வேதசமாஜமுதல்விண்ணப்பத்தில் விரிவாய் சொல்லப்பட்டிருப்பதால் அதைப்பத்திய நிருபக்காரரிட வினுக்களுக்கு விடைகளுறைப்பது அனுவசியகம். அர்ச்சைக்குப்பிரமாணங்களுரைக்ககிளம்பிய யிவர் இன்னஉபநிஷத்தில் இன்னவிதமான ஆதார மிருக்கிறதென்று சொல்ல வேண்டியதைவிட்டு திக்குபிரமம் உண்டானவன் தன் வீட்டுவழியின்னதென்று சொல்லத்தெரியாமல் யெல்லாம் தன்வீட்டுவழிதானென்று சொல்வதுபோல், இராமதாபினியோபநிஷத்துமுதலிய உபநிஷத்துகளிலிருப்பதாக நிருபத்தில் சிலவசனங்களை யெழுதியிருக்குருர். இராமதாபினியோபநிஷத்தில் அர்ச்சைக்காதாரம் அணு வளவுமில்லையென்பதும் லுப்தமாகிவிட்ட வேதபாகங்களும் பாஞ்ச ராத்திருதிகளும் படும்பாட்டையும்மேலெழுதிய முதல்விண்ணப்பத்தில் காணலாம். மேலும் நிருபக்காரர்சொல்லும் வசனங்களனைத்தையும் அவர்பார்த்த யெல்லா உபநிஷத்துகளிலும் கலந்து யெவ்விதமாய் வரையப்பட்டிருக்கிறதோ அதுவிளங்கவுமில்லை. அப்படிக்குச் செய்வது சாத்தியமெனத்தென்படவுமில்லை. இதன்றியும் அந்தவசனங்களின் நடையைநோக்குங்கா லது ஆதுனிகர்களால் கல்பிதமானசுலோகங்களாகத்தோற்றுகின்றதே யன்றி வேதவாக்கியங்களாக மதிப்பதற்கிடமில்லை. வேதம் அனுதியென்று சமாஜத்தார் வெளியிட்டதை ரிஷிபுரோக்தமென்று அவர்கள் சொன்னதாக அனுவதித்து ரிஷிகளால் சொல்லப்பட்ட சுருதிஸ்மிருதீதிகாசபுருணுதிகளில்சுருதியைமாத்திரம் ஒப்பி ஊமற்றதுகளைவேதசமாஜத்தார் திக்கரித்துவிட்டது அயுக்தமென்று நிருபக்காரர் சொல்வது மிகவும்விந்தை.

உ. வேதத்தில் கிரந்தபாகங்களுக்கு கிரமமாய் பாஷியஞ்செய்தவரை, வேதமூர்த்தி சங்கராசாரியரென்றும் அதில் ஒருஎழுத்துக்குகூட பாஷியஞ்செய்யாதவரை கேவலம் நாம்மாத்திரமாய் இராமானுஜாசாரியரென்றும் வேதசமாஜத்தாருரைத்தால் நிருபக்காரரிடபிதா மகாரஜிதம் என்னபோயிற்றோவிளங்கவில்லை. சங்கராசாரியர் பாஷி

யஞ்செய்வதற்கு முன் மனுவசிஷ்டாதி மஹரிஷிகள், சாத்துவிகஸ்மிருதீதிகாச புராணாதிகளால் வேதாந்தங்களை வெளியிட்டிருந்ததைப்பற்றி இராமானுஜாசாரியர் தசோபநிஷத்துக்களுக்கு பாஷியஞ்செய்யவில்லையென்றும், பகவன்னியமனப்படி லோகசம்மோஹனார்த்தமாக ஸ்ரீமத்வேதமூர்த்திசங்கராசாரியர் அவதரித்து வேதார்த்தங்களைகெடுத்தபடியால் அதைத் திருத்துவிக்கும்பொருட்டு பகவான்திருவன்தாழ்வானை அவதரிப்பித்ததாகவும்நிருபக்காரர் சொல்லுகிறார். இதுஅசம்பாவிதமென்று சுவல்பத்தில் அறியலாம். வேதார்த்தங்களை ரிஷிகள்வெளிப்படுத்தியிருக்க அதைக்கெடுக்கஒருவரையும் திருத்த ஒருவரையும்பகவான்அவதரிப்பித்தது வீண்காரியமாகவும் துஷ்கிருத்தியமாகவுமிருக்குது. நம்மைப்போல பகவானும் துஷ்டசேஷ்டைகளுடையவரென்று விதையார்நம்புவார்கள்? நம்மிட வேதானுசாரிகளாகிய பாஷியக்காரர்களுக்குள் சங்கரபாஷியமானது ஆதியில் உண்டாகி சகலநாடுகளிலும் பரவியிருப்பதாலது சிறந்ததென்றுவேதசமாஜத்தார் சொன்னதற்கு பதிலாயிவையிலும் அதைவிடப் பரவி யிருப்பதாக நிருபக்காரர் சொல்வதினாலிவரிட யோக்கியதைநன்றாய் வெளியாகிறது. கடசீயாகஇராமானுஜ மதத்துக்குள்ப் படாதவர்கள் மகாபாவிகளென்றும் அவர்கள் விஷ்ணுவின் கருணைக்குப் பாத்திரர்களல்லவென்றும் அவர்கள் சொல்வதைப் பார்த்ததால் உலகத்தார் யாவரையும் அந்தமதத்துக்குள் படுத்தும் பொருட்டாகவே யிவர்அவதரித்ததாகயெண்ணவேண்டி யிருக்கிறது. இந்தசெய்கைமதவைராக்கியத்தில் மிகுந்தபாதிரிகளிடத்தில் கூடகண்டதில்லை.

௫. ஸ்ரீருத்திரமூர்த்தியை நிந்தித்து சில பிரஸ்தாபங்கள் செய்கிறார். இதற்குயென்னஅவசியம் நேரிட்டதோ அதுவிளங்கவில்லை. அந்தமூர்த்தியின் மகிமையைக்கூறுவதில் ஆதிசேஷன்முதலானவர்கள்கூட அசமர்த்தர்களென்றால் அதையாரால் விரித்துரைக்கக்கூடும். ஆகிலும் வேதத்தில், ஸ்ரீ[illegible] [illegible] பிரசினங்களும், ஆரணம், ௰-வது பிரசினத்திலடங்கியிருக்கும் அநேகமஹாமந்திரங்களும் சுவேதாசுவதரோபநிஷத்தும் அந்தமூர்த்தியின் மஹிமையை கோஷித்துக்கொண்டிருப்பதுமன்றி சுவேதாஸ்வதரோபநிஷத்து மூன்றாம் அத்தியாயத்திலும் ஆரணம், ௰-வது பிரசினம் ௰௨-ம் அனுவாகத்திலும் ஹிரண்ய[illegible]ருனபிரம்மாண்டருத்திரன் ஜனிபித்தாரென்று வியக்த்தமாய்ச் சொல்லியிருக்க, பிரமனிடத்திலிருந்து ருத்திரன் உண்டானதாக வேதங்களிலும்உபநிஷத்துகளிலுமிருப்பதாக நிருபக்காரர் சொல்வது கேவலம் கக்ஷியாவேசமானபரமறோக்த்தியாயிருக்கிறது.

௬. போஜனபிரதிபோஜனமாய்சப்தாடம்பரமான அநேகவசனங்களையெழுதிக்கடைசியாக உயர்ந்தவன் தாழ்ந்தவனுடனும் அயுக்தகாரிகளுடனும் பந்திபோஜனம்செய்யவிரும்புவாறுவென்று சொல்லுகிறார். இது யுக்த்தந்தான். இந்தமட்டிலிராமல் இராமானுஜமதத்தில் சிறந்தவர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் முக்கியமான பந்துக்களுடன் போஜனம்செய்வதைக்கூட ஒழித்துவிடுகிறார்களே அதென்ன? குலகோத்திர விசாரத்தின்பேரில் ஒருவன் வீட்டுப் பெண்ணை மைற்றொருவன்விவாகஞ்செய்து அத்தம்பதிகளுக்கு ஜனிக்கும் பிரஜையானது உலகநடவடிக்கைகள் முழுமைக்கும் உரித்தாயிருக்க பெண்வீட்டாரும் புருஷன்வீட்டாரும்சேர்ந்து போஜனம் செய்வதைக்கூட ஒழித்துவிடுகிறார்கள். இதைக்குறித்து மூலவிசாரஞ்செய்யப்புகுங்கால் வைஷ்ணவமதம் ஆதுனிகமாகையாலும் அதில் வந்தேறியிருக்குஞ்சாதிபேதம் தெரிந்துக்கொள்வது அசாத்தியமானதாலும் புருஷன்வீட்டார் சிறந்தவர்களோ பெண்வீட்டார் மிகுந்தவர்களோ வென்றும் சங்கைதீராமை யிதற்குக் காரணமாக நிற்கிறதேயன்றி வேறொன்றும்புத்திக்கெட்டவில்லை. இப்படிக்கிவர்கள் ஒழித்திருந்தும் இவர்களின் பிறார்பதம் யிவர்களைவிடவொட்டவில்லை. என்னவெனில் விஷ்ணுவாலயங்களிலும் அதைச்சேர்ந்த மண்டகப்படிகளிலும் விசேஷகாலங்களில் -௱-படி அறிசிசோத்தையும் ௫௦ - படி தயிரையும் விட்டுக்கலந்து போறாத்திறவாம்சத்துக்குசுவயம்பாகிகளின் சரீரவேர்வையையும் உதவிக்கொண்டு தத்தியோனன் திருப்பாவாடைசேர்த்து விநியோகஞ்செய்யுஞ் சமயத்தில் வைஷ்ணவர்கள் அவரவரின் யோக்கியதைக் கிசைந்தபடி அதிசசாதம் பெத்துக்கொள்ளும்பொருட்டு அந்ததர்மத்தைச் செய்யும் செட்டி வேளாளர்முதலிய தனவான்களை, யிஞ்சிததின்றகுரங்குகளும்வெழ்க்கக்கெஞ்சி தனிகர்கள்செய்யும் திரஸ்காரங்களனைத்தையும் ஒறுத்து கடைசியாக மீர் அயிதர்குலாம்காதர் தையிரயநாதமுதலி ஆரோக்கிய சாமிபிள்ளை முதலியபலவித மதஸ்தரும் பலவிதஜாதியாரும் கூடியகும்பலில்விழுந்து உண்டச்சோறுகளைக் கைப்பற்றி விதிநிஷேதமில்லாமல் விலாப்புடைக்க

த்தின்றுவிட்டு பகவத்சன்னிதிக்கு ஒன்றும் பார்க்கவேண்டிய தில்லையென்று யேப்பத்தைவிடுகுறார்கள். இந்தக்கும்பலில்வந்துசேருத அயுக்தகாரிகளும் தாழ்ந்தவர்களும்வேறுள்ளனமலைக்கவேண்டாம். இப்படிக்குத்தன்னிடத்திலிருக்கும் அக்கிரமசதத்தையும்அயுக்த்தசஹசிரத்தையும் மறந்துவிட்டு வேத சமாஜத்தாரை தூஷிக்கத்துவக்கியதை வியாஜமாகக்காட்டிபிரசக்தியில்வருுதபலவற்றையும் தூஷித்தெழுதிய நிருபக்காரரின கொள்கையை ஒருவரும்அவலம்பியாமல் தடுத்து சர்வசாக்ஷியும் ஞானானந்த சுவரூபியுமான சகதீசுரனவர் சகலஜனங்களையும் இரக்ஷிக்கவேணுமென்று பிறுர்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| கஅசுசு (வரு)<br>பிப்பிரவரிமீ கஅவ<br>திருப்பாதிருப்புலியூர் | இங்ஙனம்<br>உண்மைக்குபகாரி |

---

## தினவர்த்தமானி.

வேதசமாஜத்தார் கருத்துக்கு விகடகண்டனைசெய்த இருபிறப்பாளராகியபண்டிதர்களே! ஆசாரியர்களே! சாஸ்திரிகளே! இதனடியில்வருகின்ற மூன்றுவினுக்களுக்கு விடையளிக்க விரும்புகிறேும்.

### முதலாவது.

பிரமக்கியானமுள்ளவன் பிராமணனு அல்லவா ?

பிரமக்கியானமுள்ளவனே பிராமணனென்பீராகில், விக்கிரகாராதனஞ் செய்பவன் சூத்திரனு பிராமணனு ?

விக்கிரகாராதனை செய்பவன் சூத்திரனே என்பீராகில், விக்கிரகாராதனை செய்பலாமென்று தாங்கள் ஸ்தாபிக்கவருவதால், அப்போது தாங்கள் பிராமணுளா சூத்திராளா ?

### இரண்டாவது.

தாங்கள் தங்கள் சந்தியாவந்தனங்களில் தியானிக்கும் வேதோக்தமான காயத்திரியில் சொல்லியிருப்பதுபிரம்மமா! அல்லது விக்கிரகமா ?

### மூன்றுவது.

விதந்தைகளுக்குப் புனர்விவாகஞ் செய்வது உத்தமமா உத்தமமல்லவா ?

உத்தமமல்லவென்பீராகில்,

பிராமண விதந்தை சூத்திரனுடன் புணர்தலும், சூத்திரவிதந்தை பிராமணனுடன் புணர்தலும் ;

க்ஷத்திரிவிதந்தை சூத்திரனுடன் புணர்தலும், சூத்திரவிதந்தை க்ஷத்திரனைப்புணர்தலும்;

வைசியவிதந்தை சூத்திரனைப் புணர்தலும், சூத்திரவிதந்தை வைசியனைப்புணர்தலும்.

இந்தமட்டிலே இந்த விதந்துகள் நில்லாமல் பஞ்சமர் முதலானவர்களைப்புணர்தலும், குழந்தைகளைப் பெறுதலும், அக்குழந்தைகளைக் கொல்வதும் லோகப்பிரசித்தியாக விருக்கின்றதே-இப்போப் பட்ட சங்கதி பகிரங்கத்தில் வராதிருக்கும்பொருட்டு அப்பெண்களின் தாய்தந்தை முதலானவர்கள் மானத்துக்கஞ்சியும், தங்கள்பெண்களை இழந்துவிடக்கூடாதபக்ஷத்தினலும்மறைத்துக்கொண்டு, புனர்விவாகஞ் செய்யக் கூடாதென்கிற மவுட்டியப் பிடிவாதமுள்ள தங்கள் பந்து இஷ்டர்கள்-பண்டித ஆசாரிய சாஸ்திரி முதலானவர்களுக்கும் சாதாரணமாகச்சம்பிரமத்துடனே போஜனப்பிரதி யோஜனமும்-பெண்கொடுக்கல் வாங்கலும் நடந்தேறிக்கொண்டு வருங்காலத்தில், அவ்விதந்துகளுக்குக் கிரகசாரத்தால் கர்ப்பந்தோன்றி வெளிப்பட்டால் அய்யோ ! அப்பெண்ணைமாத்திரம் தங்கள் ஜாதியிலிருந்து நீக்கி மற்றவர்கள்மாத்திரம் பழையபடி இருத்தல் உத்தமமா, அல்லது அந்தந்தஜாதி விதந்துகளை அந்தந்தஜாதிப்பிள்ளைகளுக்குப் புனர்விவாகம் செய்வித்து, அந்தந்தஜாதி ஆசாரங்களுக்கும் நியாயத்துக்கும் குறைவில்லாமல் நடந்துகொள்வது உத்தமமல்லவா?

இவைகளுக்கு இதேபத்திரிகையில் தங்கள் கக்ஷியாவேசத்தையும் கபடத்தையும்விட்டு, கடவுளுக்குப் பொதுவாக உண்மையும் உத்தமமும் யாவருமுணர்ந்துகொள்ள கிருபைசெய்து விடைஅனுப்பக்கோறுகிறேும்.

| | |
|---|---|
| கஅசுரு (வரு)<br>டிசம்பர்மீ உ0வ<br>பெங்களூர். | இங்ஙனம்<br>உண்மையும் உத்தமமும் விரும்புவோராகிய இந்துக்கள். |

## சேலம்வேதசமாஜ விண்ணப்பம்.

சகல்சமயத்தாரும், அபேதமாக, அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகிய பேராநந்தப் பெருங்கடவுளைத் தமதிஷ்டபூர்வகமாகத் தொழுதற்கிடமாயொருதிருமாளிகை சுமார் மூவ்வாயிரம்-ரூபாய் பொறுமான பெருங்கட்டடமாகச் சமைக்க எத்தனப்பட்டிருப்பதால், அந்தத்தருமகாரியம் நிறைவேறும்படி அவரவர்க்கிசைந்த சந்தாவைக்கொடுத்து உதவிசெய்வார்களென; அதிவினயத்தோடு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சந்தாபணம் சேலத்தில் அஜ-ஙர் கஜான்சி ம-ா-ா- அண்ணுசாமிமுதலியாரிடம் அனுப்பலாம்.

வெளிப்பிரதேசங்களிலுள்ள கனவான்கள் தயவுசெய்து தங்கள் சந்தாவுடன் தமதிஷ்டர்களுடைய சந்தாவையுங் கூடியசீக்கிரத்தில் வசூல்செய்து, சந்தாபட்டியுடன், ஷ-பணத்தை, பாங்கிநோட்டாயாவது, உண்டியாயாவது, அல்லது பத்துரூபாயிக்குக் குறைந்ததாயின், அலரஅணு லேபிலாயாவது தபாலில் ரிஜஸ்டர்செய்து மேற்கண்டவர்பேருக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. தபால்முதலியகூலி சந்தாவில் தள்ளிக்கொள்ளலாம்.

மேற்குறித்த சபையாருடைய சட்டதிட்டங்களில் முக்கியமானவையும், அவர்களுடைய உத்தேசத்தையும் அடியில்காணலாம்.

௧௮௬௬ (வரு) ஜனவரி மீ சேலம்.

இங்ஙனம்,
பா, சுப்பராயலு செட்டி
காரியதரிசி.

---

## மக்களுக்கோர்மனு.

அன்பர்களும் சுதேசஸ்த்தரும் ஆகிய சோதரர்களே? நமக்குமுன்னிருக்கும் இப்பெரிதாகிய உலகத்தை உற்றுப்பார்ப்போமாகில் தாயுமானவரது அழகியசொற்படி "ஊர் அநந்தம், பேர்அநந்தஞ் சுற்றும் உறவுஅனந்தஞ் செய்யும்வினையினுல் உடலநந்தங்கருத்தோவநந்தம்பெற்றபேர் அனந்தஞ்சோர்க்க நரகமும்அநந்தம்நற்றெய்வமும் அனந்தபேதம், திகழ்கின்றசமயமும் அனந்தபேதம்" என்பதைஎளிதில் எல்லோரும் அறிந்துகொள்ளலாம். ஆயினுங் "குற்றம்பார்க்கின் சுற்றமில்லை" என ஔவைசொல்வதுபோல் நாமிந்தபேதங்களைப் பாராட்டி ஒருவரையொருவர் தூஷிப்பதினுல் நமக்குள் அன்னியோன்னியம் ஜனிக்கமாட்டாதென்பது கரதல நெல்லிக்கனிபோலும். இவ்வனந்தபேதங்களுள்ளும், அபேதமாய் நம்மெல்லோருக்கும் சர்வசம்மதமாயுமுள்ள கர்த்தவ்வியமும் கடவுளு மொன்றுளதென்பதற்குச் சற்றுஞ் சந்தேகமில்லை. அஃதாவது மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாராட்டுவது, மானிடசாமானியருக்கும் நீங்கலாக்கடமையென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருக்கின்றது. அவ்வாறே எவ்வுயிரையும் பிறப்பிக்கும் சகலலோகபிதாவாகிய ஈசனும் ஒருவனேயென்பதற்குச் சந்தேகமில்லை. நமது பிதாவாகியகடவுளைத்தொழுதலும் நமதிஷ்டரும் சோதரருமாகிய மனிதரைத்தழுவலும் இவ்விரண்டும் நமக்கு நீங்கலாக்கடமையாயிருக்கின்றன. இவ்விரண்டிற்குச் சேதமில்லாதவரையில் நமது மனதாலும், சாபத்தாலும் சர்வசுதந்திரம்வகித்து நடக்க சர்த்தர்களாயி

ருக்கின்றோம். இவ்வுண்மையை நிலைநிறுத்தி அப்பியசிக்கவேண்டுமென்பதே சென்னை வேதசமாஜத்தின் முக்கியமானகருத்து. இக்கருத்துடன்தானே இவ்விடத்தும் ஓர்சபைகூட்டப்பட்டது. இதின் சட்டதிட்டங்களை யாவருமறியும்படி அடியில் பிரசுரஞ் செய்யப்படுகின்றன.

---

## சேலம் வேதசமாஜத்தாரின் சட்டதிட்டங்கள்.

(க.) இச்சபை சேலம் வேதசமாஜமென்று அழைக்கப்படும்.

(உ.) இச்சபையாரினுத்தேசியமாவது ஒவ்வொருநாட்டார்க்கும், சாதியார்க்கும், மதத்தாருக்கும் உள்ள அபிமானுபிமதங்களை யெவ்வளவேனும் பாராட்டாமலும்தொடராமலும் மனிதருள் சர்வசோதரவாச்சல்லியத்தையும் அந்நியோந்நியத்தையும் நிலைபெறச்செய்வதேயாம்.

(ங.) இக்கருத்தை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டுச் செய்யவேண்டிய முக்கியமானமுயற்சியாவது அகிலாண்டங்களுக்கும் சிருஷ்டிகார்த்தாவும் நித்தியரக்ஷகனும் சகலதேசத்தோர்க்கும் பிதாவும் அத்வதீய ஏகநாயகனும், ஆகிய கடவுளை அன்பாலும்உண்மையாலுந் தொழுவதேயாம்.

(ச.) இவ்வாறு தொழுதற்குப் பொதுவானவும் பகவத்பிரீதியானவும், சர்வசம்மதமானவும் ஸ்தோத்திரங்களை யுபயோகப்படுத்தவேண்டும். மேலும் அவற்றில்சமயங்களுக்கடுத்த எவ்வித கோட்பாடுகளையும் சுட்டிக்காட்டுவதை யொழிக்கவேண்டும்.

(ரு.) மேற்குறித்த கைங்கரியத்தின்பொருட்டு வாரத்துக்கு இரண்டுதடவைசெவ்வாய் வெள்ளிக்கிழமைகள்தோறும் மாலையில் பெரும்பாலும் ௬-மணிமுதல் அ-மணிவரையில் சபைகூடத்தக்கது.

(௬.) இச்சங்கத்தில் இச்சபையைச் சேர்ந்தோராயினும், அந்நியராயினும், சகலரும் சாதி, மத, குல, பேதங்களின்றி கூடத்தக்கது.

(எ.) அச்சமயங்களில் கூடுமானபோதெல்லாம் சபாத்தியக்ஷர்களில் யாரேனும் ஒருவர் சகலஜன சாமானியப்பிரயோஜனகாரியான சர்வசத்விஷயங்களைப் பற்றியும் உபநியசிக்கலாம்.

(அ.) இச்சங்கத்தில்சேர்ந்து சமாஜத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஆராதனைக்கிரமத்தை யனுஷ்டிக்க விரும்புவோர் மாதத்துக்கு இரண்டணுவுக்குக் குறையாமல்அல்லது வருஷத்துக்கு ஒருரூபாய்க்குக்குறையாமல கொடுக்கின், சபையில் ஒருவராக, யேற்றுக்கொள்ளப்படுவர்.

(௯.) யாதொருவரும் இச்சமாஜத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஆராதனையன்றி இதரமார்க்கங்களைஅந்தரங்கமாயாகிலும்,பஹிரங்கமாயாகிலும்அவலம்பித்தலாலாவது, யாதாமொரு சமயத்தில் சேர்ந்தவர் என்பதினாலாவது, அல்லது இதரமானயாதொரு அபிமதங்களைப்பற்றினவர், என்பதாலாவது இச்சபையில் சேர்க்கக்கூடாதென்னும் நிர்பந்தமில்லை.

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவுங்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர் துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

---

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.